வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk    மலர் : 04    15.04.2023 சனிக்கிழமை    இதழ் : 126    பக்கங்கள் : 16




# இலங்கைக்கான கடன் பேச்சுகளில் சகல தரப்பும் இணையவேண்டும்!

## ஜப்பானிய நிதி அமைச்சர் அழைப்பு



வாஷிங்டன், ஏப். 15

**இலங்கைக்கான கடன் பேச்சுவார்த்தை நடைமுறையில் அனைத்து கடன் வழங்குநர்களும் இணைந்து கொள்ள முடியும் என ஜப்பானிய நிதி அமைச்சர் ஷூனிச்சி சுஸூகி தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் சீனா இணைந்துகொள்வதை இலக்காகக்கொண்டு இந்த கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கான பொதுவான தளமொன்றை ஏற்படுத்தவுள்ளதாக ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகியன நேற்று அறிவித்துள்ளன.

நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் கடன் சுமையைத் தீர்ப்பதற்கு

15

## குடாநாட்டில் அமைதியான புதுவருடம்



யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்.குடாநாட்டில் நேற்று சித்திரைப் புத்தாண்டு மிக அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

மக்கள் ஆலயங்களுக்குச் சென்று பூசை வழிபாடு களில் பங்கேற்றதுடன் வீடுகளில் மிக

15

## கடன் நிவாரண பேச்சுகளில் தலையிடப் போவதில்லை!

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 15

இலங்கையின் கடன் நிவாரண பேச்சுவார்த்தைகளில் தலையிடப் போவதில்லை என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டுக்குள்

15

## நிதி, பொருளாதார ஒத்துழைப்பு இலங்கைக்கு தொடர்ந்து கிட்டும்

### சீனாவும் தன் பங்குக்கு உறுதியளிப்பு

கொழும்பு, ஏப்.15

இலங்கைக்கு நிதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்கத் தயாராக உள்ளதாக சீனா உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதரகம் அதன் உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உயர்மட்ட சந்திப்பில் கலந்துகொண்ட இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இதனைத் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து சீனத் தூதரகத் தின் இந்த அறிவிப்பு

15

## பொருளாதார நெருக்கடியைக் கையாள இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பு

### இந்தியாவும் உறுதியளித்தது



கொழும்பு, ஏப். 15

பொருளாதார நெருக் கடியைக் கையாள்வதில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இந்தியா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர் பான

15




## பிரிட்டன் வெளியுறவு அதிகாரிகளை சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

லண்டன், ஏப். 15

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை லண்டனில் உள்ள வெளிவிவகார அமைச்சு காரியாலயத்தில்

15

## உள்ளூராட்சி தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்

### மகிந்த தேசப்பிரிய நம்பிக்கை

கொழும்பு, ஏப். 15

சர்வதேச இளைஞர் தினம் அல்லது உலக ஜனநாயக தினத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்த்துள்ளதாக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

15

## யாழ்ப்பாணம் பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் நான்!

### நரேந்திர மோடி பெருமிதம்



புதுடில்லி, ஏப். 15

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட முதல் இந்தியப் பிரதமர் நான்தான் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு இந்திய மத்திய இணை அமைச்சர் முருகனின் டில்லி இல்லத்தில், இடம்பெற்ற தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட் டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

“இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்த முதல் இந்தியப் பிரதமர் நான்தான். இலங்கையில் உள்ள தமிழர்கள் உதவிக்காகக் காத்திருந்தனர். எங்கள் அரசாங்கம்

11

## சஜித்தை பிரதமராக்க தயார்!

### மனோ, ஹக்கீமிடம் கூறினார் ரணில்

கொழும்பு, ஏப். 15

“எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இணைத்துக்கொண்டு எனது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு தாருங்கள். எதிர்காலத்தில் சஜித்துக்கு பிரதமர் பதவியை கூட வழங்க நான் தயார்.”

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து

15

## வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட இலங்கை தயார்!

### உறுதியளித்தார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஏப். 15

கொள்கைகள் மற்றும் வெளிப்படைத் தன்மையின் அடிப்படையில் அனைத்து கடன் வழங்குநர்களுடனும் இணைந்து செயற்படுவதற்கான அர்ப்பணிப்புடன் உள் ளோம் ஜனாதிபதி

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அடுத்து நடக்கவிருப்பது ஜனாதிபதித் தேர்தல் என்றுதான் எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். நாமும் இந்தப் பத்தியில் அதனையே எழுதியும் வருகின்றோம்.

ஆனால், இடையில் ஒரு தேர்தல் நடக்கவிருப்பது குறித்து ஜனாதிபதி தனக்கு நெருக்கமான தமிழ் தலைவர்களுக்கு தெரிவித்திருப்பதாக அறிய முடிந்தது.

நீண்ட காலமாகவே மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடாத்தவேண்டும் என்றும் பதின்மூன்றாவது அரசியலமைப்பு சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியா தொடர்ந்து தெரிவித்து வருகின்றது.

வழக்கமாக இலங்கையில் ஒருவர் புதிதாக ஆட்சிக்கு வந்தால் அவர் முதலில் பயணம் செய்வது இந்தியாவுக்குத்தான்.

ஆனால், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று எட்டு மாதங்களாகியும் இன்னமும் இந்தியாவிற்கு பயணம் செய்ய அவரால் முடியவில்லை.

ஏதோ அவருக்கு நேரம் கிடைக்கவில்லை என்று அல்ல. அவருக்கு புதுடில்லியிலிருந்து அழைப்பு கிடைக்காததாலேயே அவரால் பயணம் செய்ய முடியவில்லை.

கடந்த பல மாதங்களாக அவர் பல்வேறு வழிகளில் முயற்சி செய்தும் அழைப்பு கிடைத்தபாடில்லை.

புதுடில்லியிலுள்ள இலங்கைக்கான தூதுவர் மிலிந்த மொறகொட தன்னாலான முயற்சிகளை எடுத்துப்பார்த்தார். போதாக்குறைக்கு கோட்டாபயவும் தனது பாதுகாப்பு தரப்பு நண்பர்கள் மூலம் முயன்று பார்த்தும் இதுவரை பயன்கிடைக்கவில்லை.

கடைசியாக இலங்கை வந்து சென்ற இந்திய வெளியுறவு அமைச்சரின் விஜயத்தின்பின்னர், அவர் புதுடில்லி செல்வதற்கான பாதை திறக்கப்பட்டதாக கூறப்பட்டது.

ஆனாலும் அவர் அங்கு ஏன் இதுவரை செல்லவில்லை என்று அறிய முற்பட்டபோதுதான் அந்த விசயம் தெரியவந்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பயனாக உருவான பதின்மூன்றாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்ற ரணிலின் வாக்குறுதியை நிறைவேற்றுவது தொடர்பான ஏற்பாடுகளை பூர்த்தி செய்யாவிட்டாலும், மாகாண சபைகளுக்கான தேர்தலையாவது நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்த பின்னரே அதாவது ஆகக்குறைந்தது மாகாண சபைக்கான தேர்தலை நடாத்துவதற்கான திகதியையாவது உறுதிசெய்துகொண்டே அவர் புதுடில்லி செல்லவிருக்கிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

புதுடில்லி வருவதற்கு முன்னர் அப்படி மாகாணசபை தேர்தலுக்கான முடிவை எடுத்துவிட்டு வாருங்கள் என்று இந்தியா நிபந்தனை விதித்ததா என்பது தெரியவில்லை.

ஆனால், அந்த ஏற்பாடுகளை செய்த பின்னரே அவர் புதுடில்லி செல்ல விருக்கிறாராம்.

மாகாணசபைகளுக்கு தேர்தல் நடாத்தவேண்டும் என்றால், பழைய தேர்தல் முறையில் நடாத்துவதற்கான திருத்தம் ஒன்றை பாராளுமன்றில் நிறைவேற்றவேண்டும்.

அதுகுறித்து தனிநபர் பிரேரணையாக தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்.

அவரது பிரேரணையை பாராளுமன்றில் நிறைவேற்றுவதற்குப் பதிலாக அரச சார்பிலேயே ஒரு பிரேரணையை கொண்டுவந்தால் அதனை ஒரு சில நாட்களில் நிறைவேற்றிவிடலாம். அப்படி நிறைவேற்றப்படும் பட்சத்தில், மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனே நடாத்தலாம். பழைய மாகாணசபை தேர்தல் முறையில் மாகாணங்கள் ஒன்பதுக்கும் ஒன்றாக தேர்தல் நடாத்த வேண்டும் என்பதும் அல்ல. தனித்தனியாகவும் நடாத்தலாம். அல்லது இரண்டு மாகாணங்களுக்கு ஒன்றாகவும் நடாத்தலாம்.

அப்படியெனில் எதற்காக அரச தரப்பாக அந்த பிரேரணையை நிறைவேற்றவில்லை என்று கேட்டபோது அவர்கள் தரப்பில் சொல்லப்பட்ட பதில் ஆச்சரியமானது.

இன்றைய தேர்தல் ஆணைக்குழு எந்த நேரத்திலும் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவிருக்கின்றது.

புதிய ஆணைக்குழுவின் தலைவராக ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான மகிந்த தேசப்பிரியவே நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர் மாகாணசபைகளுக்கான தேர்தலை ஒவ்வொரு மாகாணங்களுக்கும் தனித்தனியாக நடாத்தலாம் என்ற கருத்தில் உடன்பட்டவராக இருப்பதால் அவர் பதவியேற்ற பின்னரே அந்த பிரேரணையை நிறைவேற்ற திட்டமிடப் பட்டிருக்கின்றதாம்.

அடுத்த ஆண்டு இந்தியாவில் பொதுத்தேர்தல் நடக்கவிருக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் பிரச்னைக்கு இந்தியா தீர்வாக கருதும் பதின்மூன்றை அமுல்படுத்துவதில், அல்லது ஆகக்குறைந்தது மாகாண சபைக்கான தேர்தலை நடாத்தி முடித்தாலாவது தமிழகத்தில் தமக்கு பிரச்சாரத்திற்கு உதவும் என்று இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதா கட்சி கருதுவதால், இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாகாண சபைக்கு, முதலாவதாக வடக்கு மாகாணசபைக்காவது தேர்தல் நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

**- ஊர்க்குருவி**

# தமிழர் மரபுரிமைகளை பாதுகாப்போம்! நல்லூரில் உண்ணா நோன்பு போராட்டம்

*யாழ்ப்பாணம், ஏப்.15*

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பினரின் ஏற்பாட்டில் தமிழர் மரபுரிமைகளை பாதுகாப்போம், தமிழ்ப் புத்தாண்டை மரபுரிமைக்காக எம் உணர்வுகளை வெளிகாட்டுவதுடன் ஆரம்பிப்போம் எனும் தொனிப்பொருளில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் மாலை 5மணி வரை நல்லை ஆதீன முன்றலில் உண்ணா நோன்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் தமிழ் மக்கள் சார்ந்த தேசிய சக்திகள், சமய சமூக தன்னார்வ அமைப்புக்கள் என பல தரப்புக்கள் இணைந்து முன்னெடுக்கும் மாபெரும் போராட்டத்தின் பிரதான கோரிக்கைகளாக

1.அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

2.குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

3.இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

4.மட்டு. மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

5.போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து மாபெரும் அடையாள உண்ணாநோன்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எம் மரபுரிமைகளை வென்றெடுக்க ஆன்மீகத் தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், சமுக மட்ட அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக சமூகம் ஆகியவற்றின் பங்குபற்றலுடன் முன்னெடுக்கப்படும் இந்த எழுச்சி போராட்டத்தின் மூலம் தமிழர் மரபுரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த காலங்களில் பல கால அவகாசங்கள் வழங்கப்பட்டு , ஏமாற்றப்பட்ட நிலையில் உரிய தீர்வு உடனடியாக வழங்கப்படாவிடுத்து தொடர் போராட்டங்களை பல்வேறு பரிணாமங்களில் முன்னெடுக்கப்படும் என்பதை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் இச் சந்தர்ப்பத்தில் ஆழமாக வலியுறுத்துகின்றோம் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ)

# வெப்பம் எச்சரிக்கை மட்டத்தில்

*கொழும்பு, ஏப்.15*

கொழும்பில் இன்று இரவு மழை பெய்தாலும் வெப்பம் 'எச்சரிக்கை' மட்டத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் கொழும்பு, கம்பஹா, குருநாகல், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் இன்று மனித உடலில் உணரப்படும் வெப்பச் சுட்டெண் அவதானமான நிலை வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித உடலில் 'எச்சரிக்கை' அளவில் இருக்கும் வெப்பநிலை சோர்வு மற்றும் வெப்ப பிடிப்புகளுக்கு வழிவகுக்கும்.

எனவே முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்கவும், முதியவர்கள், நோயாளிகள், குழந்தைகளை வெளிப்புறங்களுக்கு செல்வதை மட்டுப்படுத்தவும் பொதுமக்கள் வலியுறுத்தப்படுகிறார்கள்.

அத்துடன் பொதுமக்கள் இலகுரக மற்றும் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# குழம்பிப்போயுள்ள மொட்டு எம்.பிக்கள்

*கொழும்பு, ஏப். 15*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தற்போது மூன்றாக பிளவுபட்டுள்ள நிலையில், அக்கட்சியில் உள்ள எம்.பிக்கள் சிலர், அடுத்த கட்ட நகர்வு பற்றி முடிவெடுப்பதில் குழப்பிபோயுள்ளனர்.

டலஸ் தலைமையில் அணியொன்று வெளியேறிவிட்டது. பிரசன்ன ரணதுங்க, காஞ்சன விஜேசேகர, ரொஷான் ரணசிங்க என ரணில் விக்கிரமசிங்க பக்கம் மற்றுமொரு அணி நிற்கின்றது. ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமாக ஒரு அணி செயற்பட்டு வருகின்றது.


இந்நிலையில் எதிரணிக்கு போகவேண்டிய நிலை ஏற்பட்டால் என்ன செய்வதென்று மொட்டு கட்சிக்குள் உள்ளக கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

அவ்வாறு சென்றால் நாமல் ராஜபக்ஷவை எதிர்க்கட்சி தலைவராக்க வேண்டும் என மொட்டு கட்சிக்குள் ஒரு அணி எடுத்துரைத்துள்ளது.

இதைவிடவும் பஸிலை பாராளுமன்றம் அழைத்துவந்து அவரை எதிர்க்கட்சித் தலைவராக்குவது நல்லது என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்வதெனில் பஸில் இரட்டைக் குடியுரிமையை துறக்கவேண்டும். தேசியப் பட்டியலை விட்டுக்கொடுக்க ஜயந்த கெட்டகொட தயார் என ஒரு எம்.பி. தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தல்வரை ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பதுதான் நல்லது என்ற ஆலோசனையும் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)



# யாழ்.சிறைச்சாலைக்குள் பிள்ளையார் கோவில் !

*யாழ்ப்பாணம், ஏப். 15*

சிறைப்பட்டு இருக்கும் காலத்தில் கூட தங்கள் இறை வழிபாடுகளை தடையின்றி மேற்கொள்ளும் நோக்கில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் தொழிலதிபர் சி.அமரசிங்கத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிள்ளையார் ஆலயம் நேற்று பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட வழிபாட்டுகள் இடம்பெற்றன.

இதனை தொடர்ந்து கும்ப அபிஷேக குருக்கள் சிவசிறி பாலசுதர்சன் சிவாச்சாரியாரின் ஆசி உரையை தொடர்ந்து சிறைச்சாலை அத்தியட்சகர் கே.பி.ஏ.உதயகுமாரவின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியும் இடம்பெற்றது. (அ)

ஈழநாடு
Eelanadu
15.04.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசனை நம்பி?

அரசனை நம்பி புருசனை கைவிடுதல் என்றொரு வழக்குச் சொல், தமிழர்கள் மத்தியிலுண்டு. தமிழ் மக்களின் நிலைமையும் அப்படியாகிவிட்டது. எதனையும் தமிழ் அரசியல் தலைமைகளால் தடுக்க முடியவில்லை. இதில் எந்தவொரு கட்சியும், ஏனைய கட்சிகளை விமர்சிக்க முடியாது. அரசாங்கத்தோடு இணைந்திருந்திருப்பதன் மூலம் விடயங்களைச் சாதிக்க முடியுமென்று வாதிடும் தமிழ்க் கட்சிகளும் வாய்மூடியிருக்கின்றன. அவ்வப்போது இடம்பெறும் விடயங்களுக்கு எதிர்வினையாற்றும் விடயங்களை மட்டுமே, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆற்றிக்கொண்டிருக்கின்றன.

சர்வதேச அழுத்தங்கள் கைகொடுக்கும் போன்ற கதைகளும் புஸ்வாணமாகிக்கொண்டிருக்கின்றது. கடந்த 13 வருடகால அழுத்தங்களைக் கண்டு அரசாங்கம் அஞ்சவில்லை. நாடு தற்போது பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும்போது, இனப்பிரச்னை என்னும் சொல்லையே மேற்குலக நாடுகள் உச்சரிக்கவில்லை. இதிலிருந்து தமிழர்கள் எதனை கற்றுக்கொள்வது? நாடு பொருளாதார நெருக்கடிக்குள் இருப்பது தமிழர்களுக்கு சாதகமானதென்னும் கதை சொல்லப்பட்டது. ஆனால் எந்தவொரு நாடும் அதனை ஒரு விடயமாகவே எடுக்கவில்லை. தங்களது நலன்கள் சார்ந்த விடயங்களை மட்டுமே அனைத்து நாடுகளும் முதன்மைப்படுத்துகின்றன.

புலம்பெயர் அமைப்புக்களை பொறுத்தவரையில் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிடுகின்றன. மனித உரிமைகள் பேரவைக்கு தவறாமல் செல்கின்றனர். ஒரு குழுவினர் இடைக்கால அரசாங்கம் தொடர்பில் பேசுகின்றனர். இன்னொரு குழுவோ, தமிழ் மக்கள் தங்களின் தலைவிதியை தீர்மானிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று வெறும் சுலோகங்களை முன்வைத்து கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழர் வாழ்வோ முன்னரை விடவும் மோசமடைந்து செல்கின்றது. ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் தாயத்தில் உள்ள பிரதான கட்சிகளோ அல்லது பெரும்பான்மையான மக்களோ கருத்தில் கொள்ளவில்லை. அவர்களது நிலைமை பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள் என்பதாக இருக்கின்றது. புலம்பெயர் அமைப்புக்களில் ஒரு பகுதியினர் விசித்திர உலகத்தில் இருக்கின்றனர். ஒருவேளை அவர்களோ அல்லது அவர்களது குடும்பங்களோ இலங்கையை நோக்கி வரப்போவதில்லை. இதன் காரணமாகவோ என்னவோ, தங்களின் மனதில் உதிப்பதையெல்லாம் அவர்கள் கூறிக்கொண்டிருக்கலாம்.

ஆனால் நாட்டில் நடைபெறும் நிலைமையை உற்றுநோக்கினால் – தமிழ் மக்களின் நிலைமையோ எதுவும் இல்லாத சூனியத்தை நோக்கி நகர்கின்றதா என்னும் கேள்வியே எழுகின்றது. நடைபெறும் எந்தவொரு விடயத்தையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. இந்த நிலைமையானது தமிழர் தாயகத்தின் எதிர்காலத்தைக் கட்டியம் கூறுகின்றது. இப்போது நடைபெறும் சாதாரண விடயங்களையே தடுத்துநிறுத்த முடியாமல் இருக்கின்றபோது, எதிர்காலத்தில் வெளித்தரப்புக்களின் ஆதரவோடு நடைபெறப் போகின்ற விடயங்களை எவ்வாறு தடுத்துநிறுத்த முடியும். பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறத்தான் போகின்றன. அவற்றை தமிழ் அரசியல் தலைமைகளாலோ புலம்பெயர் அமைப்புக்களாலோ தடுத்துநிறுத்த முடியாது.

ஒருவேளை மாகாண சபை முறைமை இயங்குநிலையில் இருந்தாலாவது, சில விடங்களில் தலையீடு செய்யும் அதிகாரத்தை தமிழர்கள் பெற்றிருக்கலாம். ஆனால் அதுவும் தற்போதில்லை. இப்போது தமிழ்த் தேசிய அரசியலின் நிலைமையானது, அரசனை நம்பி புருசனை கைவிட்ட நிலையாகிவிட்டது. அரசனும் இல்லை – புருசனும் இல்லை. தமிழ் மக்களோ கையறுநிலையில். இங்கு தமிழ் மக்கள் என்பதால், வடக்கு-கிழக்கில் வாழ்ந்துவருகின்ற பெரும்பாலான தமிழ் மக்களே குறிக்கப்படுகின்றனர். அவர்களது வாழ்வில் விளக்கேற்றுவதற்குத்தான், இப்போது ஒரு கட்டமைப்பு தேவைப்படுகின்றது. வசதியுள்ள அரசியல் வாதிகளினதும், வசிதியுள்ள புலம்பெயர் குழுக்களினதும் சுகபோக அரசியல் கனவுகளுக்காக, ஏழை மக்கள் செத்தொழிய முடியாது.

# புதிய பயங்கரவாத தடைச்சட்டம் 25ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு

*கொழும்பு, ஏப். 15*

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் எதிர்வரும் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் கடந்த 4ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தபோதிலும், பல தரப்பினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய அன்றைய தினம் சமர்ப்பிக்கப்படவில்லை. சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்ல போதிய கால அவகாசம் இல்லாததால் சட்டமூலத்தை சமர்பிப்பதை தாமதப்படுத்துமாறு கோரப்பட்டது.

(அ)

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் வேலை

*கொழும்பு, ஏப். 15*

இலங்கை அரசாங்கமும் ஜப்பானின் முன்னணி வர்த்தகக் குழுவான பசோனா குழுமமும் ஜப்பானில் உள்ள இலங்கைப் பணியாளர்களுக்கான தொழில்வாய்ப்புகள், மனித வள மேம்பாடு, ஜப்பானிய முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவருதல் மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துதல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளன.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கும் பசோனா குழுமத்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இலங்கை பணியாளர்களை வேலை வாய்ப்புகளுக்காக ஆட்சேர்ப்பு செய்ய விரும்பும் ஜப்பானிய நிறுவனங்களின் உள்ளூர் ஆட்சேர்ப்புக்கு பசோனா குழுமம் தனது ஆதரவை வழங்குகிறது. மேலும், ஜப்பானில் வேலை தேடும் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு பசோனா குழுமம் செயல்ப டுகிறது.

இந்த முதலீட்டு ஒப்பந்தத்தின்படி ஜப்பானிய முதலீட்டாளர்களை கவரும் வகையில் முதலீட்டு மாநாடுகள் மற்றும் முதலீட்டு ஆலோசனைகளை பசோனா குழுமம் நடத்த உள்ளது.

அதேவேளை, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக, சுற்றுலாத்துறையில் பணியாற்றும் நிபுணர்களின் திறன் மற்றும் பயிற்சியை மேம்படுத்தும் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவரும் வேலைத்திட்டமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

(அ)

# மேலும் ஒரு மில்லியன் முட்டைகள் நாட்டுக்கு

*கொழும்பு, ஏப். 15*

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் ஒரு மில்லியன் முட்டைகள் நேற்று இலங்கைக்கு வந்தன.

இந்த முட்டைகள் நேற்று பிற்பகல் நாட்டுக்கு வந்து சேர்ந்தன எனவும் அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கடைசி முட்டை இருப்புக்கான அனுமதியை நேற்று முன் தினம் வழங்கியது.

இதுவரை, பேக்கரி உற்பத்தி நிறுவனங்களுக்கு முட்டைகளை விநியோகிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை, இந்தியாவில் இருந்து 4 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும் 5 மில்லியன் முட்டைகள் கொள்வனவு செய்யப்படவுள்ள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நீதிமன்றுக்குப் போலிப் பிணை ஆவணங்கள் தயாரித்து கொடுத்த குற்றத்தில் ஒருவர் கைது

*யாழ்ப்பாணம், ஏப். 15*

நீதிமன்றில் பிணை எடுப்பதற்கு போலி ஆவணங்களை தயாரித்து கொடுத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் இடம் பெற்ற கச்சதீவு திருவிழாவில் சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து நீதி மன்ற உத்தரவில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர் நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அதன்போது மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை ஆவணங்கள் , கிராம சேவையாளர் ஒப்பம் , இறப்பர் முத்திரை என்பன போலியானவை எனக் கண்டறியப் பட்டு அது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் போலி ஆவணங்களை தயாரித்து கொடுத்தவர் என அடையாளம் காணப்பட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் நீதிமன்றங்களுக்கு போலியான ஆவணங்களை செய்து கொடுத்து வரும் நபரா ? இதற்கும் முன்னரும் இவ்வாறான போலி ஆவணங்களை தயாரித்து கொடுத்தாரா ? என பொலிஸார் கடுமையான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். புது முதலீடு செய்யலாம். தடைகள் ஏற்படும் நாள்.

**கடகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிர்பாராத வெற்றி கிடைக்கும் நாள்.

**சிம்மம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். ஆடை ஆபரணம் சேரும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் வருந்துவீர்கள். முன்னேறும் நாள் எதிர்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். பொறுமை நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வேற்றுமதத்தவர் உதவுவார். லாபமடைவீர்கள். இனிமையான நாள்.

# தமிழகத்தில் ஆட்சியில் இருந்த அனைத்து கட்சிகளின் ஊழல்களும் வெளியிடப்படும்

## அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, ஏப். 15

தி.மு.க. எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகளின் சொத்துக் குவிப்பு பட்டியலை நேற்று வெளியிடுவேன் என்று தமிழக பாரதீய ஜனதா தலைவர் அண்ணாமலை தெரிவித்து இருந்தார். அதன்படி நேற்று காலை அண்ணாமலை சென்னையில் உள்ள கமலாலயத்தில், தி.மு.க. அமைச்சர்களின் சொத்துக் குவிப்புப் பட்டியலை வெளியிட்டு பேசியதாவது:-

நான் கட்டியிருக்கும் கைக் கடிகாரத்தில் இருந்து தான் பிரச்னை ஆரம்பித்தது. தி.மு.க. அமைச்சர்கள், நிர்வாகிகள் என்னைப் பற்றி அவதூறுகளை பரப்ப ஆரம்பித்தார்கள். நான் பெங்களூரில் வேலை பார்த்த போது பெறப்பட்ட லஞ்சப் பணத்தில் இந்த கைக் கடிகாரத்தை வாங்கி இருக்கிறேன் என்றார்கள். அப்போது நான் தி.மு.க.வுக்கு ஒரு சவால் வைத்தேன். நான் என்னுடைய கடிகாரத்துக்கான பில்லை கொடுக்கும்போது பில்லை மட்டும் கொடுக்கப்போவது கிடையாது. அதனுடன் சில கேள்விகளையும் வைக்கப் போகிறேன் என்றேன். இது நான் கேள்வி கேட்க வேண்டிய நேரம். நான் பட்டியல் வெளியிட்ட பிறகு நீங்கள் அது சரி தானா என்பதை பரிசோதித்து பாருங்கள். அதன் பிறகு 1 வாரம் கழித்து பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கிறேன். ஒரு சாமானியன் அரசியலில் இருப்பது கடினமான வேலை. எந்த சாமானியனாக இருந்தாலும் சரி, அதில் முதல் தலைமுறை சமானியனாக இருந்தால் எண்ணற்ற சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். ஏனென்றால் அவர்களுக்கு முன்பு பாதை இல்லை. யாரும் பாதை போடவில்லை. அந்த பாதையை உருவாக்க வேண்டிய கட்டாயம் முதல் தலைமுறை சாமானியனுக்கு இருக்கிறது. அது அரசியல்வாதியாக இருந்தாலும் சரி, தொழில் அதிபராக இருந்தாலும் சரி. அந்த பிரச்னைதான் எனக்கு இருக்கிறது. நான் அரசியலுக்கு வந்து விட்டேன். எனது குடும்பத்தில் யாரும் அரசியல்வாதி இல்லை. எனக்கென்று ஒரு பாதையை போடவில்லை. 3 தலைமுறை அரசியல் இல்லை. என்னை பாதுகாக்க யாரும் இல்லை. நட்புக்கள் இல்லை. என்னை பாதுகாப்பாக கரம் பிடித்து அரசியல் வழி நடத்தி செல்வதற்கு கூட யாரும் இல்லை. ஒரு கட்சி, ஒரு கொள்கை, அதில் உள்ள தலைவர்களை நம்பி தான் நம்முடைய பயணம் இருந்து கொண்டிருக்கிறது. அரசியல்வாதியாக ஒரு மாதத்திற்கு எனக்கு பல லட்சம் ரூபாய் செலவாகிறது. ரூ.7 லட்சம் முதல் ரூ.8 லட்சம் வரை ஒரு மாநில தலைவராக எனக்கு செலவாகிறது. என்னுடைய சம்பாத்தியத்தில் 8 லட்சம் ரூபாய் பார்க்க முடியாது. நண்பர்களின் உதவி, கட்சியின் உதவியை வைத்து சமாளித்துக் கொண்டிருக்கிறேன். காருக்கு டீசலை கட்சி கொடுக்கிறது. பாதுகாப்புக்காக பெரிய வீட்டுக்கு சென்றதால் அதற்கான வாடகையை இன்னொருவர் கொடுக்கிறார். பல நல்ல மனிதர்களின் உதவியோடுதான் அரசியல் வாழ்க்கையை நகர்த்த முடிகிறது. இது எனக்கு இருக்கக்கூடிய பிரச்னை. நான் நண்பர் ஒருவரின் காரை பயன்படுத்திக் கொண்டு இருக்கிறேன். என் 3 உதவியாளர்களுக்கு நண்பர்கள் சம்பளம் கொடுக்கிறார்கள். நான் ஐ.பி.எஸ். அதிகாரியாக முதல் முறை வாங்கிய சம்பளத்தில் இருந்து அனைத்து விவரங்களையும் இணையத்தளத்தில் போட்டு விடுவேன். எம்.பி.ஏ. முடித்த பிறகு என்னுடைய 11 லட்சம் ரூபாய் கடனை கட்ட 7 ஆண்டுகள் சிரமப்பட்டேன். நான் ஒரு கடிகாரத்தை 2 ஆண்டுகளாக கட்டிக்கொண்டிருக்கிறேன். 3 லட்சம் ரூபாய்க்கு இந்த கடிகாரத்தை வாங்கி இருக்கிறேன். விலையை தாண்டி இதன் காரணத்துக்காக இந்த கடிகாரத்தை கட்டி இருக்கிறேன். எனது கடிகார பில்லை நான் காட்டுகிறேன் பாருங்கள். ரபேல் கடிகார வரிசையில் 147ஆவது கடிகாரத்தை நான் வாங்கினேன். சேரவாதன் ராமகிருஷ்ணன் என்ற நண்பரிடம் இருந்து ரபேல் கடிகாரத்தை நான் வாங்கினேன்.

தமிழகத்தில் ஆட்சியில் இருந்த அனைத்து கட்சிகளின் ஊழல் பட்டியலும் வெளியிடப்படும். தமிழகத்தில் ஆட்சியில் இருந்த அனைத்து கட்சிகளின் ஊழல் பட்டியலும் 2024இல் ஆண்டுக்குள் வெளியிடப்படும். தி.மு.க. மீது மட்டுமல்ல. 2024ஆம் பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக எந்த பிரச்னை வந்தாலும் எதிர்க்க நான் தயார். ஊழல் பட்டியலை 4 பகுதிகளாக வெளியிடுவேன். வேறு வேறு கட்சிகளும் அதில் இடம்பெறும். தி.மு.க.வினரின் கருப்பு பணம் மற்றும் பினாமி சொத்துக்களின் பட்டியலை பகுதி 2இல் வெளியிடுவேன்- என்றார். (அ)

# மீனவர்களின் போராட்டம் தொடர்ந்தது!

சென்னை, ஏப். 15

மீனவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்குமாறு கோரி மீனவர்களினால் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

சென்னை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் மீனவர்களினால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

கடற்துறை வேலை வாய்ப்புகளில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் மீனவர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கவேண்டும் மற்றும் ஆழ்கடல் மீன்பிடி படகு கட்டுவதற்கு அனுமதியை பெற்று தரவேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியல் நிலைப்பாட்டை தக்க வைக்க தி.மு.கவைச் சாடுகிறார் அண்ணாமலை

## கனிமொழி பேட்டி

தூத்துக்குடி, ஏப். 15

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தனது அரசியல் நிலைப்பாட்டை தக்க வைத்துக் கொள்வதற்காக தி.மு.க.வினர் மீது இது போன்ற குற்றச்சாட்டுகளை முன் வைக்கிறார் என தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

சட்டமேதை அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி தூத்துக்குடி தென்பாகம் போலீஸ் நிலையம் அருகே உள்ள அவரது சிலைக்கு தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி, சண்முகையா எம்.எல்.ஏ., மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். பின்னர் அவரிடம், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தி.மு.க.வினரின் சொத்துப்பட்டியலை வெளியிட்டது குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அப்போது கனிமொழி எம்.பி. கூறுகையில்-

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தனது அரசியல் நிலைப்பாட்டை தக்க வைத்துக் கொள்வதற்காக தி.மு.க.வினர் மீது இது போன்ற குற்றச் சாட்டுகளை முன் வைக்கிறார்- என்றார். (அ)

# சமுர்த்தி வங்கி ஊழியர்கள் இன்று முதல் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஏப். 15

**சமுர்த்தி வங்கி ஊழியர்கள் இன்று முதல் நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.**

சரியான பதவி உயர்வு முறைமை இல்லாமை, சமுர்த்தி அதிகாரிகளுக்கு பயணக் கொடுப்பனவுகளும் அலுவலகக் கொடுப்பனவுகளும் வழங்கப்படாமை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக சமுர்த்தி தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதான செயலாளர் டபிள்யூ.ஜோதிரத்ன தெரிவித்தார்.

சமுர்த்தி அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் கடந்த காலங்களில் வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமது கோரிக்கைகளுக்கு அரசு இதுவரை செவி சாய்க்காமையால் இந்த தொடர் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)



## புத்தளத்தில் போதை வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப். 15

புத்தளம் கரம்பை உலுக்காப்பள்ளம் பகுதியில் போதை வியாபாரிகளுக்கும் அப்பகுதி இளைஞர்களுக்கும் இடையில் கைக்கலப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து போதை வியாபாரத்தை நிறுத்துமாறு கோரி அப்பகுதி மக்கள் போதை வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் கரம்பை, உலுக்காப்பள்ளம் கிராமத்தில் அதிகரித்து வரும் போதை வியாபாரத்தை நிறுத்துமாறு கோரி அப்பகுதி மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போதைப் பொருளை விற்பனை செய்யவண்டாமென்று தெரிவித்த இளைஞர்கள் மீது, போதை வியாபாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதி இளைஞர்களும் போதை வியாபாரிகளைத் தாக்கியுள்ளனர்.

இதன்போது இரு தரப்புக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஊர்மக்கள் ஒன்று திரண்டு போதை வியாபாரத்தை நிறுத்துமாறு கோரி கரம்பை உடப்பு சந்தியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்று திரண்டு பேரணியாக சென்று போதை வியாபரியின் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு நுரைச்சோலைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிவில் உடையில் வருகை தந்தார்.

இரண்டு கிழமைக்குள் போதை வியாபாரத்தை அவ்விடத்திலிருந்து நிறுத்துவதாக அவர் வாக்குறுதி அளித்தார்.

அதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு விட்டு அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர். (அ)

## காணமல்போன மாணவன் சடலமாக மீட்கப்பட்டார்!

கொழும்பு, ஏப். 15

அக்குரஸ்ஸ கடற்கரையில் நீராடச் சென்றிருந்த வேளையில் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போன மாணவனின் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை தர்மசோக வித்தியாலயத்தில் 11ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 17 வயதுடைய எச்.பி.சஞ்சன என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த மாணவனுடன் மேலும் இரு மாணவர்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டதுடன், ஏனைய இருவரையும் பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளனர்.

மீட்கப்பட்ட இரு மாணவர்களும் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## தீக்கிரையான பட்டாசு கடை!

கொழும்பு, ஏப். 15

கிரியுல்ல பிரதேசத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பட்டாசு விற்பனைக் கடை ஒன்றில் தீ பரவியுள்ளது.

நேற்று முன் தினம் இரவு தீ பரவியதாகவும், கிரியுல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தீ விபத்தால் கடையில் இருந்த பட்டாசுகள் அனைத்தும் எரிந்து நாசமாகின.

இந்த தீ விபத்தில் இரு புறமும் உள்ள இரண்டு கடைகளின் சொத்துக்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரியுல்ல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## கறவை பசுக்களை நிழலான இடங்களில் கட்டி வையுங்கள்

### மில்கோ நிறுவனம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 15

கறவைப் பசுக்களை எதிர்வரும் இரண்டு நாட்களுக்கு நிழலான இடங்களில் கட்டி வைக்குமாறு மில்கோ நிறுவனம் கோரியுள்ளது.

கடும் வெப்பமான வானிலை நிலவுவதன் காரணமாக இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், கிழக்கு, வடமத்திய, தென் மாகாணங்களிலும் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, குருநாகல் மாவட்டங்களிலும் கடும் வெப்பமான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)



## பற்றி எரிந்தது ஓட்டோ!

கொழும்பு, ஏப். 15

களுத்துறை பிரதேசத்தில் புத்தாண்டை முன்னிட்டு உறவினர் வீட்டுக்கு பயணித்த குழுவினரை ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஓட்டோ முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

ராகம பிரதேசத்தில் வசிக்கும் குழுவினர் அக்கலவத்தைப் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளாகக் கூறப்படுகின்றது.

இந்த தீ விபத்தில் பயணிகள் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை எனவும் இது குறித்து விசாரித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## மிரிஹானவில் இருவரை தாக்கி 5 இலட்சம் ரூபா கொள்ளையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள்!

கொழும்பு, ஏப். 15

மிரிஹான பத்தேகன பிரதேசத்தில் இருவரை தாக்கி ஐந்து இலட்சம் ரூபாவை கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் நுகேகொடை பிரிவு போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றுமொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக மிரிஹான தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொள்ளையுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் ஒருவரான நுகேகொடை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை கைது செய்வதற்கான விசாரணை களை பொலிஸார் மேற்கொண் டுள்ளனர்.

கைது செய்யப்படவேண்டிய பொலிஸ் சார்ஜன்ட் தலைமறைவாக உள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)



வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் வடக்கு ஶ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று நடைபெற்றது. (அ)

# போர்டிங் பாஸ்களை மாற்றி வெளிநாடு செல்ல முயற்சி!

## யாழ்.இளைஞர்கள் இருவர் மும்பையில் கைது!!

மும்பை, ஏப். 15

**போலி கடவுச்சீட்டில் ஐக்கிய இராச்சியத்திற்கு செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர், தங்களுடைய போர்டிங் பாஸ்களை மாற்றியதற்காக ஜேர்மன் ஒருவருடன் மும்பை சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.**

ஆட்கடத்தல் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த பரிமாற்றம் நிகழ்ந்த சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

இலங்கையைச் சேர்ந்த 22 வயதான ஜெனார்த்தனன் சசானந்தம் மற்றும் ஜேர்மன் பிரஜையான 36 வயதான சந்தோஷ் தங்கரத்தினம் ஆகியோர், பாதுகாப்புச் சோதனை மற்றும் குடியகல்வுச் சோதனை ஆகியவற்றைக் கடந்து, கடந்த திங்கள் கிழமை விமான நிலைய கழிப்பறையில் முறையே காத்மண்டு மற்றும் லண்டனுக்கான போர்டிங் பாஸ்களை மாற்றிக் கொண்டனர்.

ஜெனார்த்தனனின் போர்டிங் பாஸ் மற்றும் பாஸ்போர்ட்டில் உள்ள முரண்பாடுகளைக் கண்டறிந்த ஒரு விமான ஊழியரினால் அவர்களின் திட்டம் தோல்வியடைந்தது.

மோசடி மற்றும் குற்றச் சதி ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்த சஹார் பொலிஸாரிடம் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களின் பின்னணியில் கடத்தல் கும்பல் செயல்பட்டதா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

போலி பிரிட்டன் கடவுச்சீட்டை பயணிகள் எங்கிருந்து பெற்றனர் மற்றும் அவர்கள் எப்படி ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டார்கள் என்பதைக் கண்டறிய விசாரணை நடந்து வருகிறது என்று பொலிஸ் அதிகாரி தீக்ஷித் கெடம் கூறினார்.

போர்டிங் பாஸ்களை மாற்றுவது தொடர்பான மோசடியின் மாறுபாடுகள் சமீபத்திய ஆண்டுகளில் நகர விமான நிலையத்தில் கவனிக்கப்படுகின்றன.

ஜெனார்த்தனன் இங்கிலாந்து சென்று தொழில் செய்ய ஆர்வமாக இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏப்ரல் 9ஆம் திகதி சாண்டா குரூஸில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இருவரும் சந்தித்தனர்.

"திட்டமிட்டபடி, ஜெனார்த்தனன் போலியான பிரிட்டன் கடவுச்சீட்டை (சந்தோஷ் என்ற பெயரில்) வைத்திருந்தார். மும்பை விமான நிலையத்தில் குடியகல்வுச் சோதனையை முடித்து, காத்மண்டு செல்ல போர்டிங் பாஸ் பெற்றார். சந்தோஷ் இங்கிலாந்து செல்ல போர்டிங் பாஸ் பெற்றார்.

அவர்கள் ஒரு கழிப்பறைக்குச் சென்று போர்டிங் பாஸ்களை மாற்றிக்கொண்டு தொடர்ந்தனர். சந்தோஷ் எந்த தடையையும் சந்திக்கவில்லை, காத்மண்டுவுக்கு பறந்தார்.

எவ்வாறாயினும், ஜெனார்த்தனனின் கடவுச்சீட்டு குடிவரவு முத்திரையில் 'டி4.019' என்றும், போர்டிங் பாஸில் 'டி1.240' என்றும் இருந்ததை அதிகாரி ஒருவர் கண்டறிந்ததை தொடர்ந்து அவர் பிடிபட்டார்" என்று சஹார் காவல் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதையடுத்து, காத்மண்டுவில் உள்ள குடிவரவு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டதையடுத்து, சந்தோஷ் போலியான போர்டிங் பாஸில் பயணித்தது உறுதியானது. இதையடுத்து, சந்தோஷ் கடந்த செவ்வாய்க்கிழமை மும்பைக்கு நாடு கடத்தப்பட்டார். (அ)

# போலி நாணயத்தாள் பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 15

புத்தாண்டு காலங்களில் போலி நாணயத்தாள்கள் கைமாறக்கூடும் என்பதால் பணத்தைப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்குமாறு பொலிஸார் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் போலி நாணயத்தாள்களை சந்தையில் கைமாற்றுவதற்கு மோசடிக்காரர்கள் முயற்சிக்கின்றனர் என்ற தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

இதேவேளை, புத்தாண்டு கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்யும்போது பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துமாறும் பொலிஸார் பொதுமக்களை கேட்டுள்ளனர்.

புத்தாண்டு கொண்டாட்டங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்தும்போது குறித்த பிரதேச பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் எனவும் புத்தாண்டு வர்த்தக கண்காட்சிகளை நடத்துவதற்கு பொலிஸாரின் உதவியை பெற்றுக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அனர்த்தங்களை தடுக்க நடவடிக்கை வேண்டும்!

கொழும்பு, ஏப். 15

வீதிகளில் மற்றும் வீடுகளில் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பயிற்சியளிக்கும் அதிகாரி புஷ்பா ரம்யானி டி சொய்சா இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அதிவேக வீதி மற்றும் பெருந்தெருக்களில் ஏற்படும் விபத்துக்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

அதிவேக வீதிகளில் ஏதேனும் விபத்துக்கள் நிகழ்ந்தால் அது தொடர்பில் 1969 என்ற இலக்கத்திற்கு அறியப்படுத்துமாறு அந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எல்.வீ.எஸ் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (அ)

# மனிதர்கள், யானைகளின் பலி எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, ஏப். 15

நாட்டில் யானைத் தாக்குதல் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக மனிதர்கள் மற்றும் யானைகளின் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இந்த உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளது.

காட்டு யானைத் தாக்குதல் காரணமாகக் கடந்த மூன்று மாதங்களில் 20க்கும் மேற்பட்ட நபர்கள் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், கடந்த 3 மாதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் பலியானதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத் தரவுகள் தெரிவிக்கின்றன.

குறித்த யானைகள், மனித செயற்பாடுகள் மற்றும் ரயில் விபத்துகள் போன்ற காரணத்தால் மரணமடைந்துள்ளதாக தரவுகள் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டு 439 யானைகள் உயிரிழந்ததுடன், காட்டு யானை தாக்குதல் காரணமாக 140 மனிதர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

கொழும்பு, ஏப். 15

காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான தம்புத்தேகம, தெல்ஹிரிய, கமுனுபுர பகுதியைச் சேர்ந்த டி.எம்.திலகரத்ன (வயது-59) என்பவரே உயிரி ழந்துள்ளார்.

மகள், அவரது கணவர் மற்றும் குழந்தைகளுடன் வய லுக்கு அருகில் உள்ள வீட்டில் இவர் வசித்து வந்துள்ளார்.

இது அந்தப் பகுதியில் யானைத் தாக்குதலால் இடம்பெற்ற மூன்றாவது மரணம் எனவும், இதற்கு முன்னர் அதே பகுதியில் வனவிலங்கு அதிகாரி மற்றும் விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ)

# இருள் சூழ்ந்த யுகம் நீங்கட்டும்!

## எதிர்க்கட்சி தலைவர் புதுவருட வாழ்த்து

கொழும்பு, ஏப். 15

வளமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்துக்காக உறுதியுடன் அணிதிரள்வதற்கான வலிமையைப் பெற பிரார்த்திப்பதுடன் இருள் சூழ்ந்த யுகம் நீங்கி வளமான புத்தாண்டு மலரட்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில்-

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு சூரியனின் பெயர்ச்சியுடன் ஆரம்பமாகும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு இந்நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறந்த கலாசார விழாவாகும்.

பல ஆண்டுகளாக, இலங்கை மக்கள் பல சவால்களுக்கு மத்தியில் புத்தாண்டைக் கொண்டாடினர்.

சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு சமூக உறவுகளை மேம்படுத்துவதற்கும் பழைய பழக்க வழக்கங்களைத் தொடரவும், ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தவும் உதவுகிறது.

சமூகத்தில் நேர்மறை நற்பண்புகளையும் நெறிமுறைகளையும் புகுத்தும் மாபெரும் கலாசார விழாவாக விளங்கும் சிங்கள, இந்து புத்தாண்டு, மனித நல்லிணக்கத்திற்கான கதவுகளைத் திறக்கும் நல்லிணக்கப் பண்டிகையாகவும் அமைந்துள்ளது.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது. இதன் விளைவாக மனிதன் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வாய்ப்புகளை காண்கிறான். சிங்கள இந்து புத்தாண்டு என்பது நன்றியின் உண்மையான வடிவம் என்றும் பொருள்படும்.

தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை கொண்டிருந்த நம் நாடு, தற்போது கண்ணீர் வடிக்கும் நாடாக மாறிவிட்டது, புத்தாண்டை குடும்பத்துடன் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் கொண்டாடும் வாய்ப்பு கூட பல ஆண்டுகளாக இல்லாமல் போய்விட்டது.

எமது நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை நிலைமைகளுக்கு அசாதாரணமான சவால்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த இருள் சூழ்ந்த காலம் முடிந்து,நமது நாட்டின் ஒட்டுமொத்த குடிமக்களும் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் வளமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்திற்காக உறுதியுடன் அணிதிரள்வதற்கான வலிமையைப் பெற பிரார்த்திக்கிறேன்-என்று தெரிவித்துள்ளார். (அ)

# மக்களை ஏமாற்றும் வர்த்தகர்கள் திடீரென சோதனை நடத்தப்படும்

கொழும்பு, ஏப். 15

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு நுகர்விற்காக வருகை தரும் மக்களை இலக்கு வைத்து பாவனைக்கு உதவாத பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போதே குறித்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபை மேலும் கூறியுள்ளது.

இதற்கமைய பாவனைக்கு தவாத வெங்காயம், வெள்ளைப் பூண்டு, மற்றும் உருளைக் கிழங்கு ஆகியன இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

அத்துடன் முட்டைக்கு 44 ரூபாய் நிர்ணய விலையாக அறிவிக்கப் பட்டுள்ளபோதிலும், அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (அ)



தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் பிற்பகல் 2 மணி 03 நிமிடத்துக்கு சோபகிருது புத்தாண்டு பூசை வழிபாடுகள் பக்தி பூர்வமாக இடம்பெற்றன. (அ-02)

# நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை

## பல்கலை விரிவுரையாளர்கள் விடாப்பிடி

கொழும்பு, ஏப். 15

**உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்புபட்டால், துரித திட்டம் மூலம் விடைத்தாள் மதிபீட்டை மேற்கொள்ளத் தயார் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு பணிகளுக்கு, பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சேவை அத்தியாவசியம் எனவும், அதற்கான மாற்றுத்திட்டம் இல்லையெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சார்பில் சாதகமான பதில் கிடைக்கவில்லையெனவும் அவர் கூறினார்.

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் சுமார் 60 நாட்கள் வரை தாமதமடைந்துள்ளன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடாமை , அதிகளவிலான ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்காமை போன்ற காரணங்களினால் மதிப்பீட்டுப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆசிரியர்கள் மேற்கொள்வதுடன், அதன் மேற்பார்வைப் பணியினை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொள்கின்றனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையளர்கள் சங்க சம்மேளனத்திடம் வினவிய போது, தமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனக் கூறினர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி பல்கலைக்கழகங்களில் விரிவுரை செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோதிலும் உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளிலிருந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விலகியிருப்பதாக சங்கம் கூறியது.

தமது கோரிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைய, குறித்த செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இலங்க சிங்க தெரிவித்தார். (அ)



# ஒட்டுசுட்டான் பொலிஸாரின் புத்தாண்டுக் கொண்டாட்டம்

முல்லைத்தீவு, ஏப். 15

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் நேற்று சிங்கள தமிழ் புத்தாண்டு மிக சிறப்பாக இடம்பெற்றது

தமிழ் சிங்கள புத்தாண்டு முன்னிட்டு காலை வேளையில் இனிப்புப் பண்டங்கள் பரிமாறி ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன

பணிஸ் உண்ணுதல், தேசிக்காய் கரண்டி,முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல் கயிறிழுத்தல் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதோடு பெறுமதியான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரஞ்சித் வமுனுசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இ.றமேஸ், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்களான இ.சந்திரரூபன், ச. கணேசபிள்ளை ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலை வைத்தியர், ஊழியர்கள், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா, ஒட்டுசுட்டான் பிரதேச வர்த்தக பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# மிகக்குறைந்த பஸ்களே சேவையில்!

கொழும்பு, ஏப். 15

மிகக்குறைந்த அளவிலான பஸ்களே நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

விசேட விடுமுறை தினம் என்பதால், குறுந்தூர பஸ் சேவைகள் மேற்கொள்ளப்படவில்லை என சபையின் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹங்ச தெரிவித்தார்.

தூர பிரதேச சேவைகளுக்காக 25 தொடக்கம் 30 பஸ்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பயணிகளின் எண்ணிக்கைக்கும் தேவைக்கும் ஏற்ப மாத்திரமே இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பொது முகாமையாளர் மேலும் கூறினார். (அ)

# ரணில்-சஜித்தை இணைக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது

கொழும்பு, ஏப். 15

ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைந்து கூட்டணி அமைக்கும் முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

இந்த நகர்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதகமாக பதிலளித்தபோதிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்த முயற்சியை தாங்கள் கைவிட்டுள்ளதாக மனோ கணேசன் கூறினார். முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையப் போவதாக வெளியான தகவ லின் மத்தியிலேயே இந்த கூட் டணி முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# இணுவிலில் சித்திரை பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 15

இணுவில் அறிவாலயத்தில் சித்திரைப் பெருவிழா, தமிழிசை அரங்கு என்பன புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இணுவில் அறிவாலய மண்டபத்தில் இன்று மாலை 4.00 மணியளவில் அறிவாலயத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் இணுவில் தமிழ் சங்க உறுப்பினர்களின் பட்டிமன்றம் மற்றும் இணுவை யூர் அழகேசன் மைந்தர்கள் வழங்கும் தமிழிசை அரங்கும் இடம்பெறும். (அ)



# யாழ். பல்கலை மாணவர்களால் அன்னை பூபதிக்கு நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 15

அன்னை பூபதியின், உண்ணாவிரத அறப்போராட்டத்தின் இறுதி வார 3ஆம் நாள் நினைவேந்தல் நேற்று வெள்ளிக்கிழமை , யாழ். பல்கலை மாணவர்களால் உணர்வுபூர்வமாக நினைவேந்தப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவேந்தல் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகம் உள்ளிட்ட தமிழர் வாழும் தேசம் எங்கும் இவ்வருடம் நினைவேந்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வைத்தியசாலையில் சிசு உயிரிழப்பு; திங்கள்கிழமை விசாரணை நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 15

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிசுவொன்று உயிரிழந்தது தொடர்பிலான விசாரணையை, எதிர்வரும் திங்கள்கிழமைக்கு நிர்ணயித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அன்றைய தினம், பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி மன்றில் முன்னிலையாகி சாட்சியமளிக்கவுள்ளார்.

புலோலி வடக்கு, கூவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், சில நாட்களின் முன்னர் பிரசவத்திற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு இரவு நேரத்தில் பிரசவ ஊசி செலுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. பின்னர், சிசு இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனையில், தாயாருக்கு பிரசவ ஊசி செலுத்தப்பட்டதன் பின்னர், உரிய முறையில் கவனிக்கப்படாமையினால் கருப்பை வெடித்து, சிசுவுக்கு குருதி கடத்தப்படுவது தடைப்பட்டுள்ளமை உறுதியானது என தெரிவித்து, மேலதிக விசாரணைக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி கோரியுள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட பெண், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றார்.

இது தொடர்பில் பெண்ணின் உறவினர்களால் முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கையிட்டதை தொடர்ந்து, விசாரணையை எதிர்வரும் திங்கள் கிழமை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு



# மலையகம் 200: சில அவதானிப்புகள்



கலாநிதி இரா. ரமேஷ்

மலையக மக்களின் 200 வருட வரலாற்றினை நினைவு கூறும் நிகழ்வுகள் பல்வேறு தரப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக - பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமையும். இவ்வருடம் முழுவதும் 200 வருட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையினை அறிய முடிகின்றது. சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், அரசியல் கட்சிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புகள், மத நிறுவனங்கள், தனிநபர்கள் என பலரும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளனர். கண்டியைத் தளமாக கொண்டு இயங்கும் சமூக அபிவிருத்தி நிறுவனம் மற்றும் பல சிவில் அமைப்புகள் தொடர் நிகழ்வுகளை செய்ய திட்டமிட்டுள்ளன. புத்திஜீவிகள் என்ற வகையில் நாம் மலையக மக்களின் சமகால பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு கட்டுரைகளைப் பெற்று அவற்றை தொகுத்து தமிழில் நூல் ஒன்றினையும், அதேபோல் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் மலையக மக்கள் தொடர்பாக ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள, இச் சமூகம் தொடர்பாக ஆர்வம் கொண்டுள்ள செயற்பாட்டாளர்கள் மற்றும் புலமையாளர்களிடம் இருந்து கட்டுரைகளை சேகரித்து ஆங்கில நூல் ஒன்றினையும் வெளியிட உள்ளோம்.

மலையக மக்களின் சமூக - பொருளாதார அரசியல் பிரச்சினைகள் தீவிர ஆய்வுக்கு உட்படுத்துவதானது அப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அடையாளம் காண்பதற்கும் அவற்றை சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கி பரப்புரை செய்வதற்கும் பெரிதும் உதவும். கடந்த காலங்களில் ஆய்வுகள் ஊடாக பல முக்கிய பிரச்சினைகள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டதுடன், அவை கொள்கை பரப்புரைகளுக்கு பெரிதும் உதவின என்பதில் ஐயமில்லை. இதற்கு மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பான பிரச்சினைகள், பிரதேச சபை திருத்தச் சட்டம், சுகாதாரம், கல்வி, பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவகர் பிரிவுகளின் விஸ்தரிப்பு என்பவற்றினை உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். அந்த வகையில் இக்கட்டுரையானது 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக மக்களுக்கான ஒரு பொது வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்துவதாக அமைகின்றது. மலையக மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் நிலை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும், எத்தகைய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், 200 வருடத்தில் இச்சமூகம் எட்டிய அடைவுகள் என்ன? தேசிய அபிவிருத்தி இலக்குகளை எட்டிப்பிடிக்க இன்னும் எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டும் போன்ற விடயங்கள் இந்த 200 வருட நிகழ்வுகளில் முன்னிலைப்படுத்திப் பார்க்கப்பட வேண்டும்.

கடந்த 200 வருடத்தில் அடைந்த சாதனைகள் சில, அடைய வேண்டியவை பல என்பதில் சந்தேகமில்லை. 1980களின் இறுதிப்பகுதியில் குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. கல்வித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றங்கள், சமூக நிலை, உட்கட்டமைப்பு, வீடு, சுகாதாரம் என குறிப்பிட முடியும். ஆனால், தேசிய ரீதியான அபிவிருத்தியுடன் ஒப்பிடும்போது இவை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஆயினும், இச்சமூகத்தின் இன்றைய வளர்ச்சி சுமார் 30 வருடங்களில் அடைந்து கொண்டமையாகும். குடியுரிமை வழங்கப்பட்டமையானது இச்சமூகத்தினை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அரசியல் ரீதியாக சக்திப்படுத்தியது. இச்சமூகத்தின் குரல்கள் கொள்கை வகுப்பு அரங்குகளில் பலமாக ஒலிக்க ஆரம்பித்தது. அதனையொட்டிய வகையில் மலையக சிவில் அமைப்புகளின் மற்றும் புத்திஜீவிகளின் செயற்பாடுகளும் இச்சமூகத்தின் பிரச்சினைகள் தேசிய, சர்வதேச கவனத்தினைப் பெறுவதற்கு காரணமாக அமைந்தது.

200 வருட வரலாற்றை நினைவு கூரும் தருணத்தில் மலையக மக்களின் பிரச்சினைகளை இலங்கை சமூகத்தில் பெரிதும் அறியப்பட்ட ஒன்றாக காணப்படுகிறது. அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்தில் இது பேசப்படுகிறது. இவை முற்போக்கான அபிவிருத்தியாகும். மலையக மக்கள் தமது பிரச்சினைகளை, உரிமை மறுப்புகளை, கோரிக்கைகளை எல்லா இடங்களிலும் அச்சமின்றி முன்வைக்கின்றனர். இது குறித்து வாதபிரதிவாதங்கள் இடம்பெறுகின்றன. ஏனைய சமூகங்களில் காணப்படும் முற்போக்கான சக்திகள் மலையக சமூகம் தொடர்பான கரிசனைகளைத் தொடர்ந்தும் வெளிக்காட்டி வருகின்றன. அத்துடன், இம்மக்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்குத் தயாராக உள்ளனர். இவை சாதகமான அபிவிருத்தி




யாக இருந்தாலும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மத்தியில் (சிங்கள -பௌத்த அடிப்படைவாதிகள்) மலையக மக்கள் தொடர்பாக ஒரு வகையான எதிர்ப்புணர்வு காணப்படுகின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும். இது இந்திய எதிர்ப்புவாதத்துடன் தொடர்புபட்டிருக்கிறது. இதனை மலையக மக்களுக்கான காணியுரிமையினை கோரும் போது அவதானிக்க முடியும்.

இவற்றுகப்பால், மலையக இளைஞர்கள் மத்தியில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அரசியல் ரீதியான ஆர்வம் ஏற்பட்டுள்ளது. சமூகப் பிரச்சினைகளைப் பற்றி பொது வெளிகளில் - சமூக ஊடகங்களில் தீவிரமாக பேசி வருகின்றனர். இவர்களின் அரசியல் பங்கேற்பு, மனித

**ஒரு பொது வேலைத்திட்டத்தினை சகல தரப்பினரையும் உள்வாங்கி தயாரித்து அதற்கான மக்கள் அங்கீகாரத்தைப் பெற்று பெரும்பான்மை மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்களில் உள்ள முற்போக்குவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது, விவாதிப்பது, ஊடகங்களில் பரப்புரை செய்வது, சர்வதேச கவனத்தினை ஈர்க்க உபாயங்களை வகுப்பது, அரசியல் கருத்தொருமைப்பாட்டை கட்டியெழுப்புவது என்பன 'மலையகம் 200' முழுமை பெற, ஒரு அர்த்தமுள்ள நிகழ்வாக நிறைவு பெற பெரிதும் அவசியம்.**

உரிமைகள், கல்வி, சுகாதாரம், தொழில்துறை என்பவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஆனால், இன்னும் அடைய வேண்டிய விடயங்கள் பல. ஆகவே, இருநூறு வருட நிகழ்வுகள் அனைத்தும் ஒரு பொது வேலைத் திட்டத்தினை முன்வைத்து இடம்பெறுவது அவசியமாகும். தற்போதைக்கு இத்தகைய பொது வேலை திட்டம் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை. காணி மற்றும் வீட்டுரிமை எல்லா நிகழ்ச்சிகளிலும் முன்னுரிமை பெறுவது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆயினும், ஏனைய பிரச்சினைகள் குறித்த ஒரு பொது உடன்பாட்டினை உடனடியாக எட்ட வேண்டிய தேவை காணப்படுகிறது. அத்தகையதொரு பொது வேலை திட்டம் அல்லது நடவடிக்கை திட்டம் அல்லது வரைபடம் இச் சமூகத்தின் தேவைகள், சமூக பொருளாதார மற்றும் அரசியல் கோரிக்கைகள் என்ன என்பதனை தெளிவாக வெளிப்படுத்த, அதனை தேசிய, சர்வதேச ரீதியாக பரப்புரை செய்வதற்கு உதவும்.

அத்தகையதொரு பொது வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் பேரம்பேசுவதற்கும், அதற்கான அழுத்தங்களை பிரயோகிக்கவும், சர்வதேச கொடையாளர் நிறுவனங்களை நாடி அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் பெரிதும் அவசியமாகும். ஆகவே, 200 வருட நிகழ்ச்சிகளின் நோக்கமாக இது அமையலாம். அத்தகையதொரு பொது வேலை திட்டம் விரைவில் தயாரிக்கப்படுமாயின் அதனை சகல 200 வருட நிகழ்வுகளிலும், மக்கள்மயப்படுத்த, மக்களை அது தொடர்பாக அறிவூட்ட, பொது பிரகடனமாக வெளியிட முடியும்.

மலையகத்தவர் அல்லாத பிற சமூகங்களும் 200 வருடத்தினை முன்னிட்டு சில நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றனர். அத்தகைய தரப்பினருக்கும் எமது பொது வேலைத் திட்டத்தினை வழங்கி அதற்கான ஆதரவினை சகல மட்டத்திலும் திரட்ட வேண்டும். பொது வேலைத் திட்டம் மலையக மக்களின் கல்வி, சுகாதாரம், வீடு, காணி, ஆட்சி நிறுவனங்கள், அரசியல் பிரதிநிதித்துவம், பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள், தொழில்வாய்ப்பு, பெருந்தோட்டம், கைத்தொழில், மனித உரிமைகள், வறுமை, வாழ்வாதாரம், கலை, கலாசாரம், இனத்துவ அடையாளம், உட்கட்டமைப்பு, சம்பளம் என சகல அம்சங்களையும் உள்வாங்கியதாக அமைய வேண்டும்.

மேற்கூறிய துறைகளில் எமது தற்போதைய அடைவு, அது தொடர்பான புள்ளிவிபரங்கள், தேசிய ரீதியான அடைவுகளுடன் ஒப்பிடும் போது காணப்படும் வேறுபாடுகள் மற்றும் இந்த நிலையினை சரி செய்ய அவசியமான செயற்பாட்டுத் திட்டங்கள் எவை போன்ற விடயங்களை தெட்டத் தெளிவாக முன்வைப்பதாக பொது வேலைத் திட்டம் அமைய வேண்டும். இவை முன்னுரிமை அடிப்படையில் குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால திட்டங்கள் என்ற அடிப்படையில் அமைய வேண்டும். உதாரணமாக காணிப் பிரச்சனையை எடுத்துக் கொண்டால் சுமார் 10மூ மலையக மக்களுக்கு மாத்திரமே காணியுரிமையுண்டு.

இப்பிரச்சினைக்கு குறுங்கால அடிப்படையில் செய்ய வேண்டியது யாதெனில் மலையகத்தில் காணப்படும் பயன்படுத்தப்படாத அல்லது கைவிடப்பட்ட காணிகள் தொடர்பான தரவுகள் உடனடியாக திரட்டப்பட வேண்டும். நடுத்தர அடிப்படையில் செய்ய வேண்டியது யாதெனில் அடையாளம் காணப்பட்ட காணிகளை காணியற்ற மலையக மக்களுக்கு வாழ்வாதார செயற்பாடுகளுக்காக நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல், வாழ்வாதார செயற்பாடுகளுக்கு அவசியமான கடன் மற்றும் மானிய வசதிகளை வழங்குதல் என்பனவாகும். நீண்டகால செயற்பாடு எதுவாக இருக்க வேண்டுமெனில் வழங்கபட்ட காணிகளை இம் மக்களுக்கு சொந்தமாக்குவது, காணி உரித்தினை வழங்கி காணியுரிமையுள்ள சமூகமாக மாற்றுவதாகும்.

மேலும் காணிப் பிரச்சினையினை பிறிதொரு வழியிலும் தீர்க்க முடியும். மலையகப் பெருந் தோட்டங்களில் அல்லது அதனை அண்டி வாழும் மக்களில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தினர் காணியினை பணம் கொடுத்து கொள்வனவு செய்யும் இயலுமையினைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு காணியினை வழங்க முடியும். மேலும், பெரும் எண்ணிக்கையிலானோர் கடன் பெற்று காணியினை கொள்வனவு செய்யும் இயலுமையினைக் கொண்டுள்ளனர். அத்துடன், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் மிக மோசமான வறுமை நிலையில் இருப்பதனால் அவர்களுக்கு காணியினை இலவசமாக வழங்க வேண்டும். இத்தகையதொரு வேலைத்திட்டத்தை காணியுரிமை தொடர்பாக நாம் முன்வைக்க வேண்டும்.

வீட்டுரிமை தொடர்பில் நோக்கும் போது முதலாவதாக இதுவரை கட்டப்பட்டுள்ள 38,000 வீடுகளுக்கு காணி உறுதிப்பத்திரத்தை வழங்க வேண்டும். நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய வீட்டுத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். மலையக மக்களின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மலையக புதிய கிராமங்கள் அதிகார சபையின் கீழ் பிரத்தியேக நிதியம் ஒன்றினை அமைத்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நிதி திரட்ட வேண்டும். அரசாங்கம் வங்கி கடன் அடிப்படையில் வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். அத்துடன், 180,000 வீடுகளுக்கான தேவை காணப்படுகின்றது -ஆகவே அவற்றை சுமார் 15 ஆண்டுகளுக்குள் தீர்ப்பதற்கான திட்டம் ஒன்றினை வீட்டுத் தேவையின் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள திட்டங்களை வகுக்க வேண்டும்.

இவை ஒரு சில உதாரணங்களாகும். பொது வேலைத் திட்டம் ஒன்றினைப் பற்றி சிந்திப்பதற்கான ஆலோசனைகள் ஆகும். கடந்த காலத்தில் பத்தாண்டு திட்டமொன்று காணப்பட்டது. அது தற்போது செயற்பாட்டில் இல்லை. அத்துடன், அதில் காணப்படும் தரவுகள் மற்றும் திட்டங்கள் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டியவையாகும். உதாரணமாக, 2019ஆம் ஆண்டு 11 சதவீதமாக காணப்பட்ட தோட்டத்துறை வறுமை இன்று 31 சதவீதமாக (2023இல்) அதிகரித்துள்ளது. இவ்வாறு புள்ளிவிபர ரீதியாக பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதுடன், மலையக சமூகத்தின்

(09ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# ராகுல் காந்தியின் எம்.பி பதவி பறிப்பு: பின்னுள்ள அரசியல் என்ன?

செ.கார்கி



2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலையொட்டி கர்நாடகாவின் கோலாரில் பரப்புரை செய்த ராகுல் “எப்படி திருடர்கள் அனைவருக்கும் மோடி என்ற குடும்பப் பெயர் இருக்கிறது” என்று நீரவ் மோடி, லலித் மோடி போன்றோரைக் குறிப்பிட்டு கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் பாஜகவைச் சேர்ந்த வழக்கறிஞரும், சூரத் மேற்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான புர்னேஷ் மோடி என்பவர் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

குறிப்பாக ராகுல் தெரிவித்த கருத்து, மொத்த ‘மோடி’ சமூகத்தையும் அவதூறு செய்வதாகத் தெரிவித்திருந்தார்.

4 ஆண்டுகளாக நடைபெற்ற இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்து, தற்போது ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 15000 ரூபாய் அபராதத்தையும் சூரத் நீதிமன்றம் விதித்திருக்கின்றது. இதன் மூலம் எட்டாண்டுகளுக்கு ராகுல் காந்தி தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

இது ஒரு திட்டமிட்ட தாக்குதலாகும். ராகுல் காந்தியைக் கைது செய்வதன் மூலம் ஏற்படும் இந்தியா முழுவதற்குமான எதிர்ப்பைப் பார்த்து பாஜக அரசு பயந்து கொள்கின்றது. ஆனால் அதே சமயம் 2024 பாராளுமன்றத் தேர்தலில் ராகுல் போட்டியிடாமல் செய்வதன் மூலம் ஏற்கெனவே கலகலத்துப் போய் இருக்கும் காங்கிரஸை நெருக்கடிக்கு உண்டாக்கப் பார்க்கின்றது.

தீர்ப்பளித்த அடுத்த நாளிலேயே அவரை எம்பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்து மக்களவை செயலகம் உத்தரவிட்டாலும், அதன் பிறகான எந்த நடவடிக்கையையும் எடுக்க பாஜக தயாராக இல்லை.

இன்று ராகுல்காந்தி பிற்படுத்தப்பட்ட சமூகத்தை அவமதித்து விட்டதாக காட்டுக் கூச்சல் போடும் கும்பல், உண்மையில் எப்போதாவது வரலாற்றில் அந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்கு உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொண்டு இருக்கின்றதா எனப் பார்த்தால் துரோகம் மட்டுமே எஞ்சும்.

வி.பி.சிங், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியதால், இந்தியா முழுக்க அந்தக் கும்பல் பெரிய அளவில் போராட்டங்களை நடத்தியது. வி.பி.சிங் அரசுக்கு கொடுத்து வந்த ஆதரவை திரும்பப் பெற்றதன் மூலம், வி.பி.சிங் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்த்தது.

இன்று இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பிற்படுத்தப்பட்ட மக்களிலேயே சிலர் தகுதி, திறமை இன்று பிதற்றுவதற்கான கருத்தியல் அடிப்படைகளை எல்லாம் உருவாக்கியதே இதே கும்பல்தான்.

ராகுல் காந்தி பிற்படுத்தப்பட்ட சமூகத்தை கேவலப்படுத்தி விட்டதாக கண்ணீர் வடிக்கும் இதே கும்பல்தான் இன்று ஓ.பி.சிக்கான இட ஒதுக்கீடு 27 சதவீதமாக இருந்தாலும் அதிகபட்சமாக 12 சதவீதத்திற்கு மேல் எந்தத் துறையிலும் நிரப்பாமல் வைத்திருக்கின்றது.

அதே போல பழங்குடியினருக்கு 7.5 சதவீதம் இருந்தாலும் அதில் ஒரு சதவீதம் கூட நிரப்பப்படுவதில்லை. எஸ்.சிக்களைப் பொறுத்தவரை 6-7 சதவீதம்தான் நிரப்புகின்றார்கள்.

ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம். போன்ற இடங்களில் உயர் ஜாதிகளின் எண்ணிக்கையை விட பல பத்து மடங்கு இடங்களை நிரப்புகிறார்கள். ஆனால் ஓ.பி.சி. பேராசிரியர்களே அங்கே கிடையாது. எஸ்.சி., எஸ்.டி ஒன்றிரண்டு பேரே நிரப்புகின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர்ஜாதி ஏழைகள் என்று சொல்லி, தனியாக இட ஒதுக்கீடு கொடுத்ததன் மூலம் சமூகநீதிக் கொள்கைக்கே தீ வைத்திருக்கின்றார்கள்.

இத்தனையும் செய்துவிட்டு ஓ.பி.சியினரின் நலன் மீது தங்களுக்கு அக்கறை இருப்பதாக சொல்வதெல்லாம் உலகமகா நடிப்பாகும்.

உண்மையில் ஓ.பி.சியினரின் நலன் மீதெல்லாம் மோடி அரசுக்கு அக்கறை கிடையாது. ஓடிப்போன கார்ப்ரேட் ஓடுகாலிகளைப் பற்றி ராகுல் பேசியதுதான் மோடிக்கும், இவர்களுக்கும் எரிச்சலை ஏற்படுத்தி இருக்கின்றது.

வெளிநாடுகளில் ஹவாலா பணத்தை பதுக்கி வைத்துவிட்டு, அங்கு சுகபோக வாழ்க்கை நடத்தும் நீரவ் மோடி, லலித் மோடி போன்றவர்களையோ, விஜய் மல்லையா போன்றவர்களையே இந்திய கொண்டு வந்து தண்டிக்கத் துப்பில்லாத மோடி அரசு எதற்காக ராகுலின் பேச்சுக்காக கோபம் கொள்ள வேண்டும்?

மோசடி மன்னன் அதானியைப் பற்றியும் பாராளுமன்றத்தில் பேசக்கூடாது; இந்திய மக்களையும் இந்திய வங்கிகளையும் மோசடி செய்துவிட்டு இந்தியாவை விட்டு தப்பிச் சென்ற குற்றவாளிகளைப் பற்றியும் பேசக்கூடாது என்பது இவர்கள் எவ்வளவு பெரிய கார்ப்ரேட் அடிமைகள் என்பதைத்தான் காட்டுகின்றது.

மற்றபடி ராகுல் ஓ.பி.சி சமூகத்தை அவமதித்து விட்டார் என்பது நீரவ் மோடி, லலித் மோடி போன்ற திருடர்கள் தங்கள் சாதியில் இருப்பதை அந்த மோடி சமூகமே ஆதரிக்கின்றது என்ற தோற்றத்தை ஏற்படுத்தத்தான் உதவும்.

திருடர்களும் கொலைகாரர்களும் எல்லா சாதியிலும் உள்ளார்கள். ஆனால் அவர்களை புனிதப்படுத்தி எந்த சாதி மக்களும் பேசுவது கிடையாது. விவசாயிகளாகவும், விவசாயக் கூலிகளாகவும், கூலித் தொழிலாளர்களாகவும் இருக்கும் பெரும்பான்மை ஓ.பி.சினர் மீது விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டம் போன்றவற்றைத் திணித்து அவர்களை நடுத்தெருவுக்கு கொண்டு வந்த மோடி அரசு இரண்டு திருடர்களுக்காக, குற்றவாளிகளுக்காக களத்தில் இறங்கி வேலை பார்ப்பது வெட்கக்கேடான செயலாகும்.

மக்கள் செல்வாக்குள்ள ஒரு கட்சியின் முக்கிய தலைவரான ராகுல் காந்தியையே நீதிமன்றத்தின் துணையுடன் பழிவாங்க முடிகின்றது என்றால், மாவோயிஸ்ட்களுக்கு உதவினார்கள் என்று கைது செய்யப்பட்ட சுதிர் தவாலே, மகேஷ் ரவுத், சோமா சென், வழக்கறிஞர்கள் அருண் பெரெய்ரா, சுதா பரத்வாஜ், எழுத்தாளர் வரவர ராவ், சமூகப் போராளி வெர்னான் கன்சால்வஸ், மக்கள் உரிமைப் போராளி ரோனா வில்சன், சுரேந்திர காட்லிங், டெல்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜானி பாபு, கபிர் கலா மஞ்சின் கலைஞர்களான சாகர் கோர்க்கே, ரமேஷ் கைச்சார், ஜோதி ஜக்தப், ஸ்டேன் சுவாமி போன்றவர்களை எப்படி பழிவாங்கி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இந்தியா சட்ட ரீதியான பாசிசத்திற்கு மாறிக் கொண்டு இருக்கின்றது. எந்த சட்டப் புத்தகம் மக்களுக்கு நீதி கிடைக்க உதவும் என நம்ப வைக்கப்பட்டதோ அதே சட்டப் புத்தகத்தின் உதவியுடன் இந்தியாவை பாசிசத்தை நோக்கி தள்ளிக் கொண்டு இருக்கின்றது.

நினைத்தால் நாளையே ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி, நாளை மறுநாளே தூக்கில் போட்டுவிட முடியும். நீதிமன்றம் என்பதும் நீதிபதி என்பதும் மக்களுக்கு தாங்கள் சட்டப்படியே நடக்கின்றோம் என்பதை காட்டுவதற்காக மட்டுமே இருக்கும்.

ராகுல் போன்ற தலைவர்களுக்கே இந்த நிலை என்றால் சாமானிய மக்களின் நிலை பற்றி நாம் யோசிக்கக்கூட முடியாது.

இந்தக் கும்பல் ராமராஜ்ஜியத்தை நோக்கிய பயணத்தில் மிகத் தெளிவாக திட்டமிட்டு பயணித்துக் கொண்டு இருக்கின்றது. ஆனால் பாசிசத்தை எதிர்ப்போம் என சொல்லிக் கொண்டிருக்கும் எதிர்க் கட்சிகள் தங்களுக்குள் பாசிசம் என்றால் என்னவென்றே புரியாத, தெரியாத மனநிலையில்தான் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு எதிரான, இந்தியா தழுவிய ஒரு மிகப்பெரிய கூட்டணியை உருவாக்க கையாலாகாத நிலையில்தான் எதிர்க்கட்சிகள் அனைத்தும் உள்ளன. காரணம் ஓட்டுப்பொறுக்கி அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கூட்டணி முக்கியமேயொழிய மக்களின் நலன் முக்கியமல்ல.

பாஜக திரும்பத் திரும்ப தேர்தலில் வெல்வதற்கு காரணம் பாஜக மட்டுமே அல்ல. தகுதி இல்லாத எதிர்க்கட்சிகளுக்கும் அதில் முக்கிய பங்குள்ளது. ●

---

## மலையகம் 200:...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவைகளும், பிரச்சினைகளும் மாற்றத்திற்கு உள்ளாகி உள்ளது. நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி அவதானிக்கும் போது மலையக மக்களின் சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வெறுமனே அரசாங்கத்தை மாத்திரம் நம்பி எதுவும் நடக்கப் போவதில்லை என்று நினைக்கத் தோன்றுகிறது. பொருளாதார நிலை சீராகுவதற்கு இன்னும் 10 ஆண்டுகள் செல் லலாம். ஆகவே, நாம் பொது வேலைத்திட்டத்தினை தீட்டி சர்வதேச கொடை நிறுவனங்களிடம் நிதி திரட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கு சிறந்த ஊடகமாக மலையக புதிய கிராமங்கள் அதிகார சபையினை பயன்படுத்த வேண்டும். மலையக மக்களின் சமூக - பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கும் சகல அதிகாரங்களும் இச்சபைக்கு உண்டு என்பதனை அதிகாரச்சபை சட்டத்தின் ஊடாக அறியமுடிகின்றது.

இவற்றுக்கு எல்லாம் அப்பால், நாம் முன்வைக்கும் பொது வேலைத்திட்டம் பெரும்பான்மை சிங்கள மக்களை அச்சுறுத்துவதாக அல்லது ஐயத்தினைப் உண்டு பண்ணுவதாக அமைய கூடாது. காரணம் சிறுபான்மை மக்கள் இனத்துவ கோரிக்கைகளை முன்வைக்கும் போது அது பெரும்பான்மை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த வாய்ப்புகள் உண்டு. ஆகவே, மலையக மக்களுக்கான வேலைத்திட்டம் இவற்றை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். காலி முகத்திடலில் இடம் பெற்ற அரகலய மக்கள் போராட்டமானது சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை அச்சமின்றி பேசுவதற்கான ஒரு தளத்தினை வழங்கியுள்ளது. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதற்கு தெற்கின் இளைஞர்களும், பல முற்போக்கு அரசியல், சமூக சக்திகளும் தயாராக உள்ளன. இப்போக்கினை அரகலயவிற்கு பின்னர் அவதானிக்க முடிகின்றது.

ஆகவே, இந்த வாய்ப்பினை மலையக சமூகம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். ஒரு பொது வேலைத்திட்டத்தினை சகல தரப்பினரையும் உள்வாங்கி தயாரித்து அதற்கான மக்கள் அங்கீகாரத்தைப் பெற்று பெரும்பான்மை மற்றும் ஏனைய சிறுபான்மை சமூகங்களில் உள்ள முற்போக்குவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது, விவாதிப்பது, ஊடகங்களில் பரப்புரை செய்வது, சர்வதேச கவனத்தினை ஈர்க்க உபாயங்களை வகுப்பது, அரசியல் கருத்தொருமைப்பாட்டை கட்டியெழுப்புவது என்பன ‘மலையகம் 200’ முழுமை பெற, ஒரு அர்த்தமுள்ள நிகழ்வாக நிறைவு பெற பெரிதும் அவசியம். காலம் கடந்த ஞானம் பயனற்றது என்பது போல் நாம் இப்போதே ஒருமித்து சிந்திக்க வேண்டும். மலையகம் 200 நிகழ்வுகளை திட்டமிடும் சகல தரப்பினரும் சிந்திப்பதற்கான ஓர் ஆலோசனையாக இது அமைகின்றது. இத்தகைய பொது வேலைத்திட்டத்திற்கான ஒரு சில ஆரம்ப வேலைகளை கட்டுரையாசியர் உட்பட தற்போது இலங்கை திட்டமிடல் மற்றும் நிர்வாக சேவையில் இருக்கும் மலையக பின்புலத்தினைக் கொண்ட சிலர் ஆரம்பித்துள்ளோம். அது இறுதி வடிவத்தினைப் பெறும் போது ஊடகங்கள் வாயிலாக வெளிவரும - அது பொது கலந்துரையாடல் மற்றும் கருத்து பகிர்வுக்கான வாய்ப்பினை வழங்கும். அதனை ஆர்வமுள்ள தரப்பினர் பொது வேலைத்திட்டத்தினை தயாரிப்பதற்கான ஒரு வரைபடமாக அல்லது வழிகாட்டி ஆவணமாக கொள்ள முடியும். ●



# கீரிமலை கடற்கரையில் நாவலர்


யாழ்ப்பாணம், ஏப். 15

சிவபூமி அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் வலி. வடக்கு பிரதேச சபையின் அனுசரனையுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை கடற்கரையில் புதிதாக அமைக்கப்பட்ட நாவலர் பெருமானின் உருவச்சிலை நேற்று மாலை 5 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனால் நாவலர் பெருமானின் உருவச்சிலை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் சமயத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வவுனியா ஆலயங்களில் புத்தாண்டு சிறப்பு பூசை



வவுனியா, ஏப். 15

நாடு முழுவதும் புதுவருடப் பிறப்பு மிகவும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் கொண்டாடப்பட்டது.

வவுனியா இந்து ஆலயங்களில் நேற்று காலை விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

வவுனியா கந்தசாமி ஆலயம் மற்றும் குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் விசேட அபிசேக பூசை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் வைரவபுளியங்குளம்

ஆதிவிநாயகர் ஆலயத்தில் இரதோற்சவமும் இடம்பெற்றது.புத்தாண்டை முன்னிட்டு ஆலயங்களில் விசேட தீப ஆராதனைகளுடன் புதுவருட வழிபாடுகள் இடம்பெற்றன. (அ)



# திடீரென தோன்றிய அம்மன் சிலை

யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் நயினை நாகபூசணி அம்மனின் புதிய திருவுருவச்சிலை ஒன்று நேற்று முன் தினம் இரவு வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலை அந்த இடத்தில் யாரால் வைக்கப்பட்டது என்பது தொடர்பில் தகவல் எவையும் வெளியாகவில்லை. (அ)



தமிழ் சித்தரை புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் ஆலயங்களில் விசேட வழிபாடுகளுடன் சிறப்பு அபிஷேக பூசை வழிபாடுகளும் இடம்பெற்ற நிலையில் மன்னாரிலும் பூசை வழிபாடுகள் இடம் பெற்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சோப கிருது வருடப்பிறப்பை முன்னிட்டு நேற்று மாலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (அ)






# காரைதீவில் சித்திரை புதுவருட வெள்ளிவிழா

அம்பாறை, ஏப். 15

**காரைதீவு விளையாட்டு கழகமும், விபுலானந்தா சனசமூக நிலையமும், கல்முனை சொர்ணம் நகைமாளிகையினரும் இணைந்து நடத்துகின்ற வெள்ளிவிழா கலாசார பாரம்பரிய சித்திரைப்புத்தாண்டு விழா இன்று சனிக்கிழமை காரைதீவில் நடைபெற இருக்கின்றது.**

கழகத் தலைவர் த. தவக்குமார் தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்த கலாச்சார விளையாட்டு விழாவில், பிரதம அதிதியாக வீதி போக்குவரத்து இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்து சிறப்பிக்கிறார்.

சீர்பெறு அதிதியாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேஷன் கலந்து சிறப்பிகின்றார்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் கலந்து சிறப்பிக்கிறார்கள்.

அனுசரணை அதிதிகளாக சொர்ணம் குழுமங்களின் ஸ்தாபக தலைவர் எம். விஸ்வநாதன், அஸ்கோ அமைப்பின் தலைவர் ஏ.விவேகானந்தராஜா, லண்டன் ரி. ரமேஷ், ஆஸ்திரேலியா வீ. விவேகானந்தமூர்த்தி, ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வழமை போல் கல்விச் சாதனையாளர்களும் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் சிறப்பு , நட்சத்திர, விசேட அதிதிகளாக பல முக்கிய பிரமுகர்களும் அழைக்கப்பட்டி ருக்கின்றார்கள்.

காலையில் மரதன் ஓட்டமும், மாலையில் மைதான நிகழ்ச்சிகளாக தலையணைச்சமர், முட்டி உடைத்தல், தேங்காய் துருவுதல், மிட்டாய்பை ஓட்டம், கிடுகி ழைத்தல், தடைதாண்டி ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், சூப்பியில் பால் குடித்தல், கயிறு இழுத்தல் ,எலிஓட்டம், வினோத உடைப்போட்டி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன என்று கழகச் செயலாளர் எஸ்.கிருஷாந்தன் தெரிவித்தார்.

(அ)

# வலைக்குள் சிக்கி மீனவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு - சந்திவெளி ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று பிள்ளைகளின் தந்தை நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி, வட்டையார் வீதியைச்43 வயதுடைய கந்தையா பவானந்தன் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

மீன்பிடிக்க சென்ற நபரை காணவில்லை என்று அவரது பிள்ளைகள் தோணியொன்றில் சென்று தேடியபோது இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தோணியிலிருந்து வலை வீசும் போது தவறி விழுந்து வலைக்குள் சிக்குண்டு அதிலிருந்து மீளமுடியாமல் நீரில் மூழ்கி மரணமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிள்ளைகள் இருவரும் தந்தையின் சடலத்தை கரைக்கு கொண்டுவந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பிரேத பரிசோனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

கல் ஓயா பெருந்தோட்ட அதிகாரிகளால் விவசாயிகள் மற்றும் நில உரிமை ஆர்வலர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நில உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் உறுப்பினரும், மனித எழுச்சி அமைப்பின் இயக்குநருமான கே. நிஹால் அஹமட் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பகுதியில் குறித்த சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்டத்தில் பல விவசாயிகளது நிலப் போராட்டங்களில் என்னை இணைத்துக் கொண்டு நில உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பின் உறுப்பினராகவும் மனித எழுச்சி அமைப்பின் இயக்குநராகவும் செயற்பட்டு நான் சிலருடன் இணைந்து ஆய்வுக்காக சென்ற நிலையில் கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி கல் ஓயா பெருந்தோட்டக் கம்பனியின் அதிகாரிகள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு குழுவினரால் தாக்கப்பட்டு தகாத வார்த்தைகளால் பேசப்பட்டு மற்றும் உயிர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளேன்.மொரவில் ஆறு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுடன் எமது குழுவினர் களப்பயணத்தில் ஈடுபட்டிருந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதுடன் மேலும் நில உரிமைகளுக்காகப் போராடும் ஆர்வலர்களுக்கு எதிரான தொடர்ச்சியான துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.மேலும் தாக்குதலுக்கு உள்ளான தானும் தனது குழுவினரும் இரு நாட்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்தோம்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்ட விவசாயிகளது பாரம்பரிய நில உரிமை இழப்பு மற்றும் கரும்புப் பயிர்ச்செய்கை தொடர்பாக அவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சனைகள் தொடர்பாக காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி தலையீடு செய்து வருவதுடன் ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு இது தொடர்பில பலமுறை தெரிவித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் 2023 ஏப்ரல் 5 ஆம் திகதி விவசாயிகள் இழந்த நிலம் தொடர்பான தகவல்களை சேகரிக்க நிஹால் அகமட் அம்பாறை மாவட்டத்தின் காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் தலைவர் பீ கயிருதீன் ஆலோசகர் எம் எம் எம் இப்திகார் மற்றும் விவசாயிகள் சிலரை உள்ளடக்கிய குழு குறித்த பிரதேசத்தில் களப்பயணத்தை மேற்கொண்டு சில பிரதேசங்களிலுள்ள விவசாய காணிகள் தொடர்பான முறைப்பாடுகளின்படி இழந்த நிலப் பிரதேசங்களை அடையாளம் காண சென்றிருந்த நிலையில் இவ்வாறு தாக்குதலுக்கு முகம் கொடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அன்னை பூபதி நினைவேந்தலுக்கு பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்

மட்டக்களப்பு, ஏப். 15

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் நினைவு வணக்கம் செய்வதற்காக முதன்முதலாக பொதுக் கட்டமைப்பு மட்டக்களப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி அன்னைபூபதியின் 35ஆவது நினைவு வணக்க நிகழ்வை நடத்துவதற்கு வரலாற்றில் முதல் தடவையாக ஒரு பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த பொதுக்கட்டமைப்பில், க.பிரபாகரன்-அன்னை பூபதியுன் புதல்வர், திருமதி லோ.சாந்தி -அன்னைபூபதியின் புதல்வி,யா.அரவிந்தன் - அன்னைபூபதியின் பேரன், த.முர சொலிமாறன் குருக்கள், வண பிதா ஜோசப்மேரி அடிகளார், சபா. சிவயோகநாதன்-சிவில் சமூக செயல்பாட் டாளர், இ. செல்வகுமார்-சிவில் சமூக செயல்பாட்டா ளர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்களின் ஏற்பாட்டில் இந்த வருடம் அன்னை பூபதியின் 35, வது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளது.

19ஆம் திகதி மு.ப.09, மணிக்கு மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடு திதி ஆராத னைகளும் அதனை தொடர்ந்து அன்னதானமும் பின்னர் பி.ப 04, மணிக்கு திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் இருந்து நாவலடி அன்னைபூபதியின் கல்லறையில் சென்று பி.ப.05, மணிக்கு நினைவு வணக்கம் செலுத்தப்படும் என “தியாக தீபம் அன்னைபூபதி நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு” அறிவித்துள்ளது. (அ)

# மூதூரில் இப்தார் நிகழ்வு

மூதூர், ஏப். 15

மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பின் அங்குரார்ப்பணமும், இப்தார் நிகழ்வும் மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மூதூர் முஸ்லிம் பெண்கள் வலையமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது. இதற்கான அனுசரணையை அகம் மனிதாபிமான வலையமைப்பு வழங்கியிருந்தது.

இதன்போது முஸ்லிம் வலை யமைப்பின் பெண்களுக்கு அகம் மனிதாபிமான வலையமைப்பினால் உலருணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், அகம் மனிதாபிமான வலையமைப்பின் இணைப்பாளர், திட்ட இணைப்பாளர், மதகுருமார்கள், பெண்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# தனியார் கல்வி நிலையங்களை தற்காலிகமாக நிறுத்த பணிப்பு

அக்கரைப்பற்று, ஏப். 15

கல்முனை மாநகர எல்லைக் குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நடவடிக்கைளையும் தற்காலிகமாக இடைநிறுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு, கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

இதற்கமைய, கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம் 01 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் கடந்த 11ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் 24ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அவர் அறிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் புனித நோன்பு மற்றும் தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகைகளைக் கொண்ட மாதமாக இம் மாதம் காணப்படுகின்றது.

அத்துடன் அதிக உஷ்ணம் நிறைந்த இந்த மாதத்தில் கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக முறையிடப்பட்டுள்து.

மத அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து தொடர்ச்சியாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை மாநகர ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# மட்டக்களப்பில் ரயிலில் மோதி ஒருவர் பலி!

மட்டக்களப்பு பிரதான தொடருந்து நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் கருவப்பங்கேணியை சேர்ந்த இராசநாயகம் ரமேஸ்குமார் என்னும் 45 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரின் சடலத்தை உறவினர்கள் நேற்றுக் காலை அடையாளம் காட்டினர்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் பணிப்புரைக்கு அமைய திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்று மரண விசாரணையை முன்னெடுத்தார்.

அதனை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

(அ)

# ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது நோர்வே!

## உளவு தகவல்கள் சேகரித்த குற்றச்சாட்டில்

ஒஸ்லோ, ஏப். 15

உளவு தகவல்களைச் சேகரித்த குற்றச்சாட்டுக்காக 15 ரஷ்ய தூதரக அதிகாரிகளை நோர்வே அரசாங்கம் அதிரடியாக வெளியேற்றியுள்ளது.

உக்ரைன்-ரஷ்யாவுக்கு இடையேயான போர், கடந்தாண்டு பெப்ரவரி மாதம் தொடங்கிய சில நாட்களிலேயே ரஷ்ய தூதர்கள் உளவு தகவல்களை சேகரிப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது.

அதன்பேரில் பல நாடுகள் தங்களது நாடுகளில் ரஷ்ய தூதரக அதிகாரிகளுக்கு தடை விதிக்க தொடங்கின.

மேலும் சில நாடுகள் அவர்களுக்கு கடவுச்சீட்டுக்களை வழங்கவும் மறுத்திருந்தன.

இந்த நிலையில், ரஷ்யாவின் அயல் நாடான நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் அமைந்துள்ள ரஷ்ய தூதரகத்தில் பணிபுரியும் தூதரக அதிகாரிகள் தங்களது நாட்டின் உளவுத்தகவல்களை சேகரிப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதனை தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலாக நோர்வே கருதிய நிலையில், குறித்த அதிகாரிகளிடத்தில் விசாரணைகளும் நடத்தப்பட்டன.

இந்த விசாரணையிலும் அவர்களது செயல்பாடுகள் இராஜதந்திர நடவடிக்கைகளுடன் பொருந்தவில்லை என நோர்வே முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து நோர்வேயில் உள்ள ரஷ்யாவின் தூதரக அதிகாரிகள் 15 பேரை வெளியேற்ற தீர்மானிக்கப்பட்டது.



அதற்கான அதிகாரப்பூர்வ அறிக்கையை நோர்வே அரசாங்கம் நேற்று முன் தினம் வெளியிட்டது.

இது குறித்து கருத்து வெளியிட்ட நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் அன்னிகென் ஹூய்ட்பெல்ட், ரஷ்யாவின் உளவுத்துறை நடவடிக்கைகளின் நோக்கத்தை எதிர்ப்பதற்கும், அதன் மூலம் தேசிய நலன்களை பாதுகாப்பதற்கும் இது ஒரு முக்கியமான நடவடிக்கை ஆகும் எனத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டிலும் இதுபோல 3 தூதரக அதிகாரிகளை நோர்வே வெளியேற்றியிருந்தது.

நோர்வே அரசாங்கத்தின் இந்த செயலுக்கு ரஷ்யா நிச்சயம் பதிலடி கொடுக்கும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சு கூறியதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. (அ)



# அமெ. பண்ணையில் பயங்கரத் தீ விபத்து!

## 18,000 பசுக்கள் தீயில் சிக்கி உயிரிழப்பு

நியூயோர்க், ஏப். 15

அமெரிக்காவில், பால் பண்ணை ஒன்றில் நேரிட்ட பயங்கர தீ விபத்தில் 18,000 பசுக்கள் உயிரிழந்தன.

பால் உற்பத்திக்கு பெயர் பெற்ற டெக்சாஸ் மாநிலத்திலுள்ள சவுத்போர்க் பால் பண்ணையில் திடீர் வெடி விபத்து ஏற்பட்டு பண்ணை முழுவதும் தீ பரவியது.

பால் கறப்பதற்காக கொட்டகையில் அடைக்கப்பட்டிருந்த 18,000 பசுக்கள் தீயில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தன. பலத்த தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட ஊழியர் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மாட்டு சாணத்தை உறுஞ்சும் இயந்திரம் அதிக சூடாகி வெளிப்பட்ட தீப்பொறியால், பண்ணையிலிருந்த மீதேன் வாயு பற்றி எரிந்து விபத்து நேர்ந்திருக்கலாம் என கருதப்படுகிறது. (அ)



# கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்தோம்!

## அறிவித்தது வடகொரியா

பியொங்யாங், ஏப். 15

நாட்டின் அணு ஆயுத எதிர் தாக்குதல் திறனை அதிகரிக்கும் நோக்கில் புதிய திட-எரிபொருள் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்துள்ளதாக வடகொரியா நேற்று தெரிவித்தது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வட கொரியா நேற்று முன் தினம் வியாழக்கிழமை புதிய மாதிரி பாலிஸ்டிக் ஏவுகணையை ஏவியதை தொடர்ந்து, தென் கொரியா, வடக்கு ஜப்பானில் பீதியான நிலைமையேற்பட்டது.

வடகொரியா நடத்திய ஏவுகணை சோதனை ஜப்பானின் ஹொக்கைடோ மாகாணத்தின் அசஹிகவா நகரில் விழலாம் என்று கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஹொக்கைடோ பகுதியில் வசிக்கும் மக்களை உடனடியாக வெளியேறுமாறு ஜப்பான் அரசு வலியுறுத்தியது. மேலும் மக்கள் குடியிருப்புகளின் அடித்தளத்தில் சென்று பதுங்கிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டது. வடகொரியா ஏவுகணை சோதனை குறித்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருவதாகவும் ஜப்பான் அரசு தெரிவித்தது.

இந்த நிலையில்தான் வடகொரியா நடத்திய சோதனை ஜப்பானின் கிழக்கு கடற்கரை பகுதியில் விழுந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மக்களை வெளியேறக் கூறிய உத்தரவை ஜப்பான் அரசு திரும்பப்பெற்றது.

புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையின் இராணுவத்திறன் ஒரு மூலோபாய தாக்குதல் திறனாக உள்ளது என்பதை இந்த சோதனை நிரூபித்துள்ளது என்று கே.சி.என்.ஏ செய்தி நிறுவனம் கூறியது.

தலைவர் கிம் ஜாங் உன் இந்த சோதனைக்கு வழிகாட்டினார் என்று கே.சி.என்.ஏ தெரிவித்துள்ளது.

சமீபத்திய அமெரிக்க-தென் கொரிய கூட்டு இராணுவப் பயிற்சிகள் பதற்றத்தை அதிகரித்து வருவதாக வடகொரியா விமர்சித்துள்ளது மற்றும் சமீபத்திய மாதங்களில் ஆயுத சோதனைகளை முடுக்கிவிட்டுள்ளது. (அ)

# கனடா ஹோட்டல் அறையிலிருந்து இரு சிறுமிகளின் சடலங்கள் மீட்பு!

மொன்றியல், ஏப். 15

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் இரண்டு சிறுமிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த சிறுமிகளே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

ரெட் டீர் பகுதியைச் சேர்ந்த 13 வயதான சிறுமி ஒருவரும், செய்ல்வான் லேக் பகுதியைச் சேர்ந்த 12 வயதான சிறுமியும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

ஞாயிறு காலை ரெட் டீருக்கு மேற்கே 24 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சில்வன் ஏரியில் உள்ள பெஸ்ட் வெஸ்டர்ன் ஹோட்டலில் இந்த இரண்டு சிறுமிகளும் மர்மமான முறையில் உயிரிழந்திருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மரணத்திற்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியரின் மரணம் கொலையாகவோ அல்லது தற்கொலையாகவோ இருக்கக்கூடிய சாத்தியமில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் மருந்துப் பொருள் மித மிஞ்சிய அளவில் பயன்படுத்துகை அல்லது போதைப்பொருள் பயன்பாடு காரணமாக இந்த மரணங்கள் சம்பவித்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)



# அமெ. இரகசிய ஆவணங்களை வெளியிட்ட சந்தேக நபர் கைது!

நியூயோர்க், ஏப். 15

அமெரிக்காவின் இரகசிய ஆவணங்களை வெளியிட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் விமானப்படையின் தேசிய பாதுகாப்பு படையை சேர்ந்த 21 வயதுடையவர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவர் இணையத்தள சூதாட்டக் குழு ஒன்றின் தலைவர் என்பதும் தெரியவந்துள்ளது.

உளவு பார்த்தல் மற்றும் ரகசிய பாதுகாப்பு தகவல் பரிமாற்ற சட்டத்தின் கீழ் அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு கைத்தசையை நாக்கில் பொருத்தி சாதனை

லண்டன், ஏப். 15

இங்கிலாந்தை சேர்ந்த ஜெம்மா வீக்ஸ் என்ற 37 வயதான பெண், நாக்கில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார்.

அவருக்கு நாக்கில் வெள்ளைத் திட்டுக்கள் தோன்றின. பல ஆண்டுகளாக அந்த பிரச்னையுடன் இருந்த அவருக்கு கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நாக்கில் ஒரு பெரிய துளை உருவானது.

வலியுடன் கூடிய துளையால் அவரால் சாப்பிட முடியவில்லை. பரிசோதனையில் அவருக்கு நான்காம் நிலை வாய் மற்றும் கழுத்து புற்றுநோய் இருப்பது தெரியவந்தது. இதில் அவர் 90 சதவீத நாக்கின் பகுதியை இழந்திருந்தார். இதனால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாக்கின் பெரும்பகுதியை அகற்றிவிட்டு, கையில் இருந்து திசுக்களை எடுத்து பொருத்துவதாக தெரிவித்த மருத்துவர்கள், மீண்டும் அவரால் பேச முடியாது என கூறினார்கள்.

இந்த அறுவை சிகிச்சையின் போது, கை தசைகளை நாக்கில் வெற்றி கரமாக மருத்துவர்கள் பொருத்தினார்கள். மீண்டும் பேச முடியாது என்று கூறியிருந்த நிலையில், அறுவை சிகிச்சைக்கு பிறகு சில நாட்களில் ஜெம்மாவால் பேச முடிந்தது.

அவரை பார்க்கச் சென்ற உறவினர்களிடம் 'ஹலோ' என்று அவர் கூறினார்.

"அறுவை சிகிச்சைக்கு பிறகு என்னால் பேச முடியவில்லை. அது அப்படியே இருக்கும் என்று மருத்துவர்கள் நினைத்தனர். சில நாட்களில் என் வருங்கால கணவரும் மகளும் என்னை பார்க்க வந்த போது அவர்களிடம் ஹலோ என்று கூறினேன். அந்த குரல் முன்பு போல் இல்லை. ஆனால் அது நல்ல முன்னேற்றமாக இருந்தது. உண்மையில் நான் பேசுவதை பெரும்பாலும் மற்றவர்களால் புரிந்துகொள்ள முடியும்," என ஜெம்மா வீக்ஸ் கூறியுள்ளார். (அ)

# சிறிலங்கா றக்பி மீதான தடை நீக்கப்பட்டது!

சிறிலங்கா றக்பி (இலங்கை றக்பி நிறுவனம்) மீது விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை நீக்கிய ஆசிய றக்பி, அதற்கு மீண்டும் பூரண உறுப்புரிமை வழங்குவதாக அறிவித்தது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டதை விளையாட்டுத் துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியது.

இதனைக் கருத்தில் கொண்டே சிறிலங்கா றக்பியை ஆசிய றக்பியின் முழு அங்கத்துவமாக மீண்டும் நிலைநிறுத்துவதற்கு ஆசிய றக்பி தீர்மானித்ததாக அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியட்டுள்ள அறிக்கையில்




குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் புக்கே நகரில் கடந்த வருடம் ஏப்ரல் 9ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தின் போது, சிறிலங்கா றக்பியின் அங்கத்துவத்தை ஆசிய றக்பி நிறைவேற்றுக் குழு தற்காலிகமாக இடைநிறுத்தியது. அதனைத் தொடர்ந்து 2022 மே 1ஆம் திகதி அந்த தீர்மானத்தை ஆசிய றக்பி நிறைவேற்றுக் குழு ஏகமனதாக அங்கீகரித்து இலங்கை றக்பியின் உறுப்புரிமையை இடைநிறுத்தியது.

சிறிலங்கா றக்பி மீதான தற்காலிக தடை நீக்கம் குறித்து ஆசிய றக்பி தலைவர் காயிஸ் அல் தலாய் கருத்து வெளியிடுகையில், 'சமத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பேற்றல் போன்ற கொள்கைகளை பேணுவதற்காக, ஆசிய றக்பியின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, இலங்கை றக்பியின் அங்கத்துவத்தை இடைநிறுத்த நிறைவேற்றுக் குழு தீர்மானித்தது.

எனினும் இலங்கையின் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு முன்னர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெற்றதை கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.இது சிறிலங்கா றக்பி மீதான தற்காலிகத் தடையை நீக்குவதற்கு வழிவகுத்தது -என்றார்.



## இளையோர் வலைப்பந்து அணித் தேர்வில் இழுபறி

தென் கொரியாவில் நடைபெறும் ஆசிய இளையோர் வலைப்பந்து போட்டிக்கு பரிந்துரைக்கப்பட்ட இலங்கை வலைப்பந்து அணியின் தெரிவை இரத்துச் செய்து மீண்டும் அதற்காக தேர்வை மேற்கொள்ளும்படி தேசிய விளையாட்டு தெரிவுக் குழு விடுத்த கோரிக்கையை தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு நிராகரித்துள்ளது.

பதவியில் இருந்து இராஜினாமா செய்வதைத் தவிர அதற்கு வேறு எந்த மாற்றும் இல்லை என்று தேசிய விளையாட்டு தெரிவுக் குழுவின் செயலாளர் அர்ஜ/ன பெர்னாண்டோவுக்கு தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு தலைவி தமயந்தி ஜயதிலக்க அறிவித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

தென் கொரியாவின் ஜயோன்ஜ/ நகரில் அடுத்த ஆசிய இளையோர் வலைப்பந்து போட்டி வரும் ஜூலை 10 தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதற்காக 12 வீராங்கனைகள் மற்றும் மூன்று மேலதிக வீராங்கனைகளைக் கொண்ட இலங்கை குழாம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

என்றபோதும் தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு பரிந்துரைத்த இலங்கை அணிக்கு தேசிய கனிஷ்ட வலைப்பந்து பயிற்சியாளர் அமல்கா குணதிலக்கவின் அதிருப்தி வெளியாகி இருந்தது.

அணியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வீராங்கனைகள் தொடர்பில் தமக்கு திருப்தி அடைய முடியவில்லை என்று அவர் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அணித் தேர்வை மீண்டும் மேற்கொள்ளும்படி தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்வு செய்யப்பட்டிருக்கும் அணி ஏற்கனவே தமது பயிற்சிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மைக்கல் ஜோர்டன் காலணி 2.2 மில்லியன் டொலருக்கு ஏலம்

பிரபல கூடைப்பந்து வீரர் மைக்கல் ஜோர்டன் அணிந்திருந்த காலணிகள் 2.2 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளன.

போட்டிகளில் அணியப்பட்ட காலணிகளிலேயே மிக அதிக விலைக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ள காலணிகள் இவையாகும்.

ஜோர்டன் போட்டிகளின்போது அணிந்திருந்த காலணிகள், ஜெர்சி சட்டைகள் ஆகியவற்றுக்கான தேவை எதிர்பார்த்ததை விட அதிகமாக இருப்பதை அது நிரூபிப்பதாகக் கூறப்பட்டது.

ஏலம் போயுள்ள காலணிகளை ஜோர்டன் 1998ஆம் ஆண்டு நடந்த என்.பி.ஏ போட்டியின் இறுதிச்சுற்றில் அணிந்திருந்தார். அந்தச் சுற்றில் ஜோர்டனின் சிக்காகோ புல்ஸ் அணி வெற்றிபெற்று என்.பி.ஏ போட்டியை வென்றது. அது ஜோர்டனின் ஆறாவது என்.பி.ஏ வெற்றியாக இருந்தது.

இறுதிச்சுற்று முடிந்தவுடன் அவர் காலணிகளில் கையெழுத்திட்டு அதைத் திடலிலிருந்து வெளியில் போகும் பந்துகளை எடுத்துக்கொடுக்கும் சிறுவனிடம் கொடுத்தார்.

ஆனால் ஏலத்தில் காலணிகளை விற்றது அந்தச் சிறுவன் அல்ல. ஏலத்தில் விற்றதும் வாங்கியதும் யார் என்பதை சோதபிஸ் நிறுவனம் குறிப்பிடவில்லை.

## பஞ்சாபை வீழ்த்தியது குஜராத்

சண்டிகார் மொஹாலி விளையாட்டரங்கில் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இண்டியன் பிறீமியர் லீக் (ஐபிஎல்) கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் கிங்ஸினால் நிர்ணயிக்கப்பட்ட 154 ஓட்டங்கள் என்ற சுமாரான மொத்த எண்ணிக்கையை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நடப்பு சம்பியன் குஜராத் ரைட்டன்ஸ் ஒரு பந்து மீதம் இருக்க 6 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

கடைசியாக நடைபெற்ற 6 போட்டிகளில் 5 போட்டிகள் கடைசி ஓவரில் முடிவை தந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

மோஹித் ஷர்மாவின் கட்டுப்பாடான பந்துவீச்சும் ஷூப்மான் கில் நிதானம் கலந்த வேகத்துடன் பெற்ற அரைச் சதமும் குஜராத் ரைட்டன்ஸின் வெற்றிக்கு வழி வகுத்தன.

அப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸின் ஆரம்ப வீரர்களான பிரப்சிம்ரன் சிங் (0), அணித் தலைவர் ஷிக்கர் தவான் (8) ஆகிய இருவரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர். இது அவர்களது அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்தது.

எவ்வாறாயினும் மத்யூ ஷோர்ட் (36), பானுக்க ராஜபக்ஷ (20), ஜீட்டேஷ் ஷர்மா (25), சாம் கரன் (22) ஆகியோர் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி அணியை கௌரவமான நிலையில் இட்டனர்.

மத்திய வரிசையில் மசூத் ஷாருக் கான் 9 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றதால் பஞ்சாப் கிங்ஸ் 150 ஓட்டங்கள் என்ற மொத்த எண்ணிக்கையைக் கடந்தது.

குஜராத் ரைட்டன்ஸ் பந்துவீச்சில் மோஹித் கான் 4 ஓவர்களில் 18 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

154 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குஜராத் ரைட்டன்ஸ் கடும் சவாலுக்கு மத்தியில் 19.5 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ரிதிமான் சஹா, ஷூப்மான் கில் ஆகிய இருவரும் 28 பந்துகளில் 48 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். ரிதிமான் சஹா 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஷூப்மான் கில், சாய் சுதர்ஷன் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் மேலும் 41 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது சுதர்ஷன் 19 ஓட்டங்களுடன் வெளியேறினார். அணித் தலைவர் ஹார்திக் பாண்டியா 8 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார். அதேவேளை, ஓட்ட வேகம் போதுமானதாக இருக்கவில்லை.

எனினும் /ப்மான் கில், டேவிட் மில்லர் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 30 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 148 ஓட்டங்களாக உயர்த்தியபோது கடைசி ஓவரின் 2ஆவது பந்தில் ஷூப்மான் கில் 67 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

டேவிட் மில்லரும் ராகுல் தெவாட்டியாவும் பரபரப்புக்கு மத்தியில் துடுப்பெடுத்தாடி அடுத்த 3 பந்து களில் குஜராத்தின் வெற்றிக்கு தேவையான 6 ஓட்டங்களைப் பெறறுக்கொடுத்தனர்.

மில்லர் 17 ஓட்டங்களுடனும் தெவாட்டியா 5 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.



## ஜயசூரியவின் 'இலங்கை கிரிக்கெட்' ஆலோசனை குழுவின் பணி ஆரம்பம்

இலங்கை கிரிக்கெட் சபைக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் புதிதாக நியமிக்கப்பட்ட சனத் ஜயசூரிய தலைமையிலான உறுப்பினர்களுக்கு விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த ஐவர் கொண்ட தொழில்நுட்பக் குழு இலங்கை கிரிக்கெட்டுக்கு தொழில்நுட்ப விடயங்கள் குறித்து ஆலோசனை வழங்குவது மற்றும் அண்மைக் காலத்தில் வீரர்கள் தேர்வுகள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் என்று இந்த நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் ரணசிங்க தெரிவித்தார்.

"அண்மைக் காலத்தில் ஒரு கிரிக்கெட் நாடாக இலங்கை பெரும் பின்னடைவை சந்தித்திருப்பதை பார்க்கிறோம். என்ன தவறு நிகழ்ந்தது என்பதை நாம் ஆராய வேண்டி இருப்பதோடு அடுத்த உலகக் கிண்ணத்தை நாட்டுக்குக் கொண்டுவர திட்டங்களை வகுக்க வேண்டும். புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் இந்த புதிய குழுவுடன் பணியாற்றுவதற்கும் எமது இலக்குகளை வெற்றிகரமாக அடையவும் நாம் உறுதியாக உள்ளோம்" என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பேசிய சனத் ஜயசூரிய, எதிர்வரும் உலகக் கிண்ணத்தில் தனது இடத்தை உறுதி செய்ய தகுதிகாண் போட்டியில் ஆடவேண்டியதை இட்டு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். தோல்விக்கான காரணத்தை ஆராய்வதும் இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் தமது திறமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதும் முக்கியம் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

"அண்மைக் காலத்தில் தேசிய அணி வீழ்ச்சிப் பாதையில் செல்வது குறித்து தேர்வுக் குழுவினர், பயிற்சியாளர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம். அந்த பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் வலுப்படுத்துவதற்கு தேவைப்படும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம். எதிர்வரும் உலகக் கிண்ணத்திற்கு வலுவான அணி ஒன்றை தயார்படுத்துவதே எமது பிரதான இலக்காகும்" என்று ஜயசூரிய குறிப்பிட்டார்.

நியமிக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான பர்வீஸ் மஹ்ரூப், அசந்த டி மேல், கபில விஜேகுணவர்தன மற்றும் சரித் சேனநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# மக்கள் புதிய மாற்றத்தையே எதிர்பார்த்து இருக்கின்றனர்!

## கூறுகின்றார் சமீர பெரேரா

கொழும்பு, ஏப்ரல் 15

**‘நாட்டு மக்கள் புதிய மாற்றத்தையே எதிர்பார்த்து இருக்கின்றனர். விற்பனை அரசியலை அல்ல’ என்று ஐக்கிய பிரஜைகள் அமைப்பின் ஒருங்கமைப்பார் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.**




கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய கொள்கை, புதிய நோக்கத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதை எதிர்பார்க்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவது, மக்களின் குரல்களை நசுக்குவது, நாட்டு மக்களின் மீது வரிச்சுமைகளை திணிப்பது மாற்றமாக அமையாது.

நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்து அதன் மூலம் பாற்சோற்றை தற்போது உண்ணலாம். ஆனால், இன்னும் சிறிது காலம் சென்றதன் பின்னர் உண்பதற்கு உணவுக்கு இருக்காது. அரிசிக்காக காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வது என்பது பாரதூரமான விளைவுகளையே ஏற்படும்.

இலாபமீட்டும் நிறுவனங்களை முதலீட்டாளர்கள் பெற்றுக்கொள்வது எமக்கு நன்மைகளை செய்வதற்காக அல்ல.

இலாபத்தை ஈட்டிக்கொள்வதற்காகவே முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகின்றனர்.

இதுவரை மக்களுக்காக சேவையாற்றிய வந்த அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தினால் அந்த நிறுவனங்களினூடாக கிடைக்கும் பயன்கள் அடிமட்ட வர்க்கத்தினருக்கு கிடைக்காது என்று அமெரிக்க பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

உலகில் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையிலும் அந்த நடைமுறையே பின்பற்றப்படுகின்றது.

இந்த தனியார் மயப்படுத்தல் என்பது அடிமட்ட மக்களை வெளியேற்றுவதை போன்ற நடவடிக்கையாகவே அமையும்-என்றார். (அ)

# ஓமான் பாதுகாப்பு இல்லத்தில் மேலும் 76 இலங்கை பணிப்பெண்கள் தஞ்சம்!

கொழும்பு, ஏப். 15

ஓமானில் உள்ள பாதுகாப்பு இல்லத்தில் மேலும் 76 இலங்கை பணிப்பெண்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொது முகாமையாளருமான காமினி செனரத் யாப்பா இதனைத் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் 36 பேர் சுற்றுலா விஸாவில் ஓமானுக்கு சென்று பணிபுரிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பணியகத்தில் பதிவு செய்யாது, வெளிநாட்டில் தொழில் வாய்ப்புகளுக்காக செல்வோருக்கு எதிர்வரும் காலத்தில் பாதுகாப்பு இல்லத்தில் தஞ்சம் வழங்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாது தொழில் வாய்ப்புக்குச் செல்வது, நாட்டின் சட்டங்களை மீறும் செயலாகும். (அ)

# பிரமாண்டமாக நடத்தப்படவுள்ள மேதினக் கூட்டங்கள், பேரணிகள்

கொழும்பு, ஏப். 15

மேதின பேரணிகளையும், கூட்டங்களையும் இம்முறை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ், சிங்களப் புத்தாண்டு முடிவடைந்த கையோடு இதற்கான ஏற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு ஏற்பாட்டுக் குழுக்களுக்கு கட்சி தலைமைகள் கட்டளையிட்டுள்ளன.

பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன கொழும்பை மையப்படுத்தியே மே தினக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் நிகழ்வுகளும் கொழும்பிலேயே நடைபெறவுள்ளன.(அ)

# ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் 2 விடயங்கள் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் கரிசனை

கொழும்பு, ஏப். 15

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை வரவேற்றுள்ள ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் இரண்டு முக்கிய விடயங்கள் தொடர்பில் கரிசனை கொள்வதாக அறிவித்துள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட இந்த சட்டமூலமானது, அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிலையில் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஊழல் எதிர்ப்பு சட்டமூலமானது 1994ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கையூட்டல் மற்றும் ஊழல் பற்றிய முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவை ஸ்தாபித்தல் சட்டம் மற்றும் 1975ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டம் என்பவற்றின் மாற்றீடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் தொடர்பில், பல்வேறு தரப்புகளிடம் இருந்து கருத்துகள் கோரப்பட்டு அவதானம் செலுத்தப்பட்டது.

அதனடிப்படையில், இலங்கையில் தற்பொழுது உள்ள ஊழல் எதிர்ப்பு சட்டக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்த உதவும் வகையில் பல முன்னேற்றகரமான விடயங்கள் இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தனியார் துறை, பாலியல் இலஞ்சம், விளையாட்டு நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஊழல் குற்றங்கள் அதில் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கிய மாற்றங்களாக கருதமுடிகின்றது.

அத்துடன், குற்றங்களுக்காக விதிக்கப்படும் அபராத தொகையும் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள சொத்து அறிவிப்பு முறைமையில், ஒரு மத்திய அதிகாரம் கொண்ட அமைப்பாக கையூட்டல் அல்லது ஊழல் பற்றி புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவொன்று காணப்படும்.

அதில் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அனைத்து அறிவிப்புக்களும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சில முக்கியமான தகவல்கள் திருத்தப்பட்டு இலத்திரனியல் முறைமையூடாக சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனங்கள் பொதுவெளியில் கிடைக்கப்பெறும்.

இதன்மூலம் தனிநபர்களின் சட்டவிரோத செறிவூட்டல் தொடர்பான விடயங்களை இலத்திரனியல் முறைமையூடாக மக்களினால் அடையாளம் காண முடியும்.

தற்போதைய சட்டத்தை போலின்றி, இந்த முன்மொழியப்பட்ட சட்டமூலத்தில், ஜனாதிபதியின் சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விபரங்களை பிரகடனப்படுத்துமாறும் கோருகிறது.

எவ்வாறாயினும், ட்ரான்ஸ்பரன்ஸி நிறுவனமானது இந்த முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தில் முக்கிய இரண்டு விடயங்கள் தொடர்பில் கரிசனை கொள்கிறது.

இச்சட்டமானது தகவல் அறியும் உரிமைச் சட்டம் உட்பட மற்ற அனைத்து எழுதப்பட்ட சட்டங்களையும் மீற முற்படுகிறது.

முன்மொழியப்பட்ட சட்டத்தில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சரத்துகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகள் இரகசிய பாதுகாப்பு பிரமாணத்தில் கையெழுத்திட வேண்டிய பிரிவுகள் காணப்படுகின்றன.

ஆகவே, புதிய சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் தகவல்களை வெளியிடுவது ஆணைக்குழுவின் சிறப்பு அனுமதியுடன் மாத்திரமே சாத்தியமாகும்.

எனவே, அதிலிருந்து தகவல்களை அணுகுவதை மிகவும் கடினமாக்குவதன் மூலம் இரகசிய கலாசாரம் ஊக்குவிக்கப்படுகிறது.

அத்துடன், ஆட்சியில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தல் எனும் நோக்கமும் மறுக்கப்படுகிறது.

இதேவேளை, தவறான குற்றச்சாட்டுகளை குறிக்கும் இந்த சட்டமூலத்தின் 119 ஆவது பிரிவு, ஊழல் தொடர்பில் தகவல் வழங்க விரும்பும் பொது மக்களுக்கும் முறைக்கேடுகளை வெளிப்படுத்தும் நபர்களுக்கும் எதிர்மறையான சமிக்ஞையை தோற்றுவிக்கக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, முறைப்பாட்டை மேற்கொள்ளும் நபர்கள் மத்தியில் அச்சுறுத்தல் மற்றும் அச்சுறுத்தும் சூழ்நிலையை உருவாக்கக் கூடாது. வினைத்திறனான சட்ட அமுலாக்கம் மற்றும் ஜனநாயக சூழ்நிலை என்பன சட்டத்தின் வெற்றிக்கு முக்கியமானவையாகும் என ட்ரான்ஸ்பரன்ஸி நிறுவனம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவது மிகஅவசியமானது

## வலியுறுத்துகின்றது ஐ.தே.க

கொழும்பு, ஏப். 15

நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவசியம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகருமான ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியான நிலைமையை சீர் செய்வதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நிலையான ஆட்சி முறைமை தேவை என்பதை பொதுமக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் எனவும் மேலும் கூறினார். (அ)

# எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; ஒரு தரப்பினர் லஞ்சம் பெற்றனரா?

## விசாரணை நடத்துமாறு பணிப்பு

கொழும்பு, ஏப். 15

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் விபத்துக்குள்ளான எக்ஸ்-பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பாக இலங்கைக்கு பெருந்தொகை நட்டஈடு கிடைக்கவுள்ளது. குறித்த நட்டஈடு தொடர்பாக தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கலந்துரையாடல்களில் பங்குகொண்ட குறித்த தரப்பொன்று 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை கையூட்டாக பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த டொலர் தொகை பிரிட்டன் வங்கியொன்றிலுள்ள கணக்கொன்றுக்கு அனுப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்னவை தான் கோரியுள்ளதாக நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு எதிரான நட்டஈட்டை மீளப்பெறுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்காத வகையிலேயே இந்த கையூட்டல் வழங்கப்பட்டுள்ளதாகவும், கப்பலின் காப்புறுதி நிறுவனத்தால் இந்த தொகை வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்படி, அந்த தகவலின் உண்மை தன்மை தொடர்பாக ஆராயும் பொறுப்பை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு தாம் பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியதாக நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவித்தார். (அ)

## பிரிட்டன்...

நடைபெற்றது.

இதில் இலங்கையில் இருந்து சென்றுள்ள ரெலோ செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் மற்றும் ரெலோ பிரிட்டன் கிளையின் தலைவர் சாம் சம்பந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற இருக்கும் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்தில் உள்வாங்க வேண்டிய பல முக்கிய விடயங்கள், பயங்கரவாதத் தடைசட்டம், தொடர்ச்சியான நில அபகரிப்பு தொல்பொருள்,வன திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு ஊடாக வடக்கு-கிழக்கில் தமிழ் இனத்தின் இனப் பரம்பலை குறிவைத்து மேற்கொள்ளப்படும் அரசின் திட்டமிட்ட செயற்பாடுகள், கடந்த நான்கு வருடங்களாக திட்டமிட்டு இழுத்தடிப்பு செய்யப்படும் மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி தேர்தல், தனது அரசியல் அமைப்பையே மீறிச் செயற்படும் அரசின் செயற்பாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும் 72 வருடங்களாக இழுத்தடிப்பு செய்யப்படும் தமிழ் இனப் பிரச்னை, 12 வருடங்களாக எதையுமே அமுல் படுத்தாத ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்கள் என்பன சுட்டிக்காட்டப்பட்டன.

இவ்வாறான ஒரு அரசுடன் மூன்றாவது தரப்பு மத்தியஸ்தம் இன்றி அரசியல் தீர்வுக்கான சாத்தியமான அறிகுறிகள் இல்லை.

எனவே, இந்தியாவுடன் இணைந்து பிரிட்டன், இலங்கையில் தமிழ் இனத்திற்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கான அழுத்தத்தை கொடுக்கவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் ரெலோ பிரிட்டன் கிளையின் தலைவர் சாம் சம்பந்தன் ஆகியோர் வலியுறுத்தினர்.

மேலும் அரசியல் கொந்தளிப்பான நாட்டில் பொருளாதார வளர்ச்சி அடையமுடியாது என்றும், நாட்டின் வளர்ச்சிக்கு பதிலாக கிளர்ச்சியை அடக்கவே சர்வதேச நிதிகளை அரசாங்கம் பயன்படுத்தும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## யாழ்ப்பாணம்...

அவர்களுக்காக ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறது. நான் யாழ்ப்பாணம் சென்றபோது, அங்கு தமிழர்களுக்காக இந்திய அரசால் கட்டப்பட்ட வீடுகள் ஒப்படைக்கப்பட்டன. வீட்டில் நுழையும் முன்பு இடம்பெறும் பால் காய்ச்சும் பாரம்பரிய சடங்கில் நானும் கலந்து கொண்டேன். அதன் வீடியோக்கள் தமிழ்நாட்டில் வெளியானபோது தமிழ் மக்களிடமிருந்து நான் நிறைய அன்பைப் பெற்றேன்” என மோடி இதன்போது தெரிவித்தார். (அ)

## குடாநாட்டில்...

அமைதியான முறையில் புத்தாண்டைக் கொண்டாடினர்.

நல்லூர் கந்தன் ஆலயத்தில் புத்தாண்டை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிண்டுள்ள நிலையில் யாழ். குடாநாட்டில் புத்தாண்டு வியாபார நடவடிக்கைகள் அவ்வளவு சோபிக்கவில்லை.

அத்தியாவசியமான பொருள்களை மட்டும் கொள்வனவு செய்து மக்கள் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேபோன்று, வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் மிக அமைதியாக புத்தாண்டு கொண்டாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## நிதி...

வெளியாகியுள்ளது.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்தகால கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக, சீன அமைச்சர் வேங்டொங்வேயும், இலங்கையின் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இலங்கைக்கான ஒத்துழைப்பை சீனா மீள உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, சீன அமைச்சர் வேங்டொங்வேய் உடனான சந்திப்பு பயனுள்ளதாக அமைந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தமது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கடன் சுமை, பொருளாதார அபிவிருத்தி ஆகியன தொடர்பில் தீர்வினை எட்டுவதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கான ஆதரவை சீனா இதன்போது உறுதிப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## வெளிப்படைத்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகியவற்றின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இரு தரப்பு மற்றும் பல தரப்பு பங்காளர்களும், வர்த்தகக் கடன் வழங்குநர்களும் ஒன்றிணைவார்கள் என எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இதன்போது கூறினார்.

இதனிடையே, இலங்கை முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு விரைவான கடன் தீர்வு அவசியம் என, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா கூறியுள்ளார்.

கடன் நிலைத்தன்மையை ஏற்படுத்துவதற்கு கடன் வழங்குநர்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்து இரு தரப்பு கடன் வழங்குநர்களும், கடன் மறுசீரமைப்பிற்கு இணங்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார். (அ)

## பொருளாதார...

உயர்மட்ட சந்திப் பில் கலந்துகொண்டபோது, இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இதனைத் தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளில் அனைத்து கடன் வழங்குநர்களையும் கையாள்வதில் வெளிப்படைத் தன்மையும் சமத்துவத்தை உறுதிப்படுத்த கடன் வழங்குநர்களுக்கிடையில் ஒத்துழைப்பும் முக்கியமானது என அவர் வலியுறுத்தினார். (அ)

## கடன்...

இலங்கை செலுத்த வேண்டிய 17 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடைவெளியுடன், மொத்தமாக 24 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி இடைவெளியை இலங்கையின் கடன் நிவாரண செயற்பாடு நிரப்பும் என எதிர்பார்ப்பதாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் பிராந்திய பணிப்பாளர் கிருஷ்ணா சிறினிவாசன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இலங்கை மற்றும் அதன் கடன் வழங்குநர்களிடையே இடம்பெறும் பேச்சுவார்த்தைகளுக்கமைய, கடன் நிவாரண நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் மறுசீரமைப்பு இடம்பெறும் விதம் மாறுபடும் என அவர் குறிப்பிட்டார்.

ஆகவே இந்த விடயங்களில் சர்வதேச நாணய நிதியம் தலையிடப் போவதில்லை என அவர் மேலும் கூறினார். (அ)

# தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் 22ஆம் திகதி யாழில் போராட்டம்!

### பௌத்த ஆக்கிரமிப்பை எதிர்த்து

யாழ்ப்பாணம், ஏப். 15

தமிழ் மக்களின் மீதான நில, தொல்லியல் ஆக்கிர மிப்பு மற்றும் பயங்கர வாத எதிர்ப்புச் சட் டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வடக்கு-கிழக்கு தழுவிய போராட்டத்தின் முதற்கட்டம் யாழ்ப்பா ணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்த போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட் டுள்ளது.

சுமார் 10 அரசியல் கட்சிகள், பல்வேறு பொது அமைப் புக்கள் இணைந்து இந்தப் போராட் டத்தை முன்னெடுக்கவுள்ளன.

வடக்கு-கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் இந்த போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் போராட்டத்தை நடத்தலாமென ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர். (அ)

# புதுவருடப் பிறப்பான நேற்று மாலை களுதாவளை கடலில் நடந்த சம்பவம்

### தெய்வாதீனமாக உயிர் தப்பிய ஆண்கள், பெண்கள்

மட்டக்கலப்பு, ஏப். 15

சித்திரை வருடப்பிறப்பான நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளைக் கடற்கரையில் அதிகளவு மக்கள் தத்தமது குடும்பத்தினருடன் மாலைப் பொழுதைக் கழித்திருந்தனர்.

இந்நிலையில் இளைஞர்கள் சிலர் அக்கடலில் இயந்திரம் பொருத்திய சிறியரக படகு ஒன்றை மிகவும் வேகமாக ஓட்டினர்.

கடலில் படகை ஓட்டிய இளைஞர்கள் அப்படகை சற்று நேரத்தில் கரை சேர்த்திருந்தனர். பின்னர் மீண்டும் கடலில் படகை இறக்குவதற்குத் தயாரான நிலையில் அதில் கடற்கரையில் நின்ற இன்னும் சில ஆண்களும், பெண்களும் ஏறினர்.

பின்னர் படகை கடலுக்குள் நகர்த்திய இளைஞர்கள் இயந்திரத்தை இயக்க முற்பட்ட வேளை அது



இயங்கவில்லை. பல முறை முயன்றும் அது இயங்கவில்லை.

சிறிது நேரம் கரையிலிருந்து சற்று தொலைவில் படகு தத்தழித்துக் கொண்டிருந்தது.

பின்னர் பொங்கி வந்த அலையில் படகு கரையை நேக்கி தூக்கி வீசப்பட்டது. இதனால் படகிலிருந்த ஆண் ஒருவர் கீழே விழுந்துள்ளார். அவருக்கு மேலே படகு வீழ்ந்துள்ளது. இதனால் அவர் உபாதைக்குட்பட்ட நிலையில் கரையில் நின்றவர்களால் மீட்கப்பட்டார்.

கரையை நோக்கி படகு அலையினால் தூக்கி வீசப்பட்டத்தில் படகிலிருந்த ஏனைய ஆண்களும், பெண்களும், மிகவும் தெய்வாதீனமாக கரையிலிருந்தோரால் காப்பாற்றப்பட்டனர். இதில் பாதிக்கப்பட்டவரை மீட்டு உறவினர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

இதனால் ஏற்படவிருந்த பாரிய அனர்த்தத்தில் தெய்வாதீனமாக அனைவரும் காப்பாற்றப்பட்டதாக கரையிலிருந்த மக்கள் தெரிவித்தனர். (அ)

## உள்ளூராட்சி...

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய அறிக் கையின் இறுதி வரைவு கையளிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களின் பிர தேச எல்லைகள் மாற்றப் பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

அத்துடன் பாராளுமன்றச் சட்டத்தின் ஊடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படுமாயின் தற்போதுள்ள நிலை மையில் மாற்றம் ஏற்படு வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன-என்றார். (அ)

## இலங்கைக்கான...

இந்த செயன்முறை ஒரு முன்மாதிரியாக அமையும் என இந்த மூன்று நாடுகளும் நம்புவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான பொதுவான தளமொன்றை அமைக்கும் நடவடிக்கை வரலாற்று ரீதியானது என ஜப்பானிய நிதி அமைச்சர் ஷூனிச்சி சுஸூகி தெரிவித்துள்ளார்.

பரிஸ் கிளப் போன்ற செல்வந்த கடன் வழங்குநர்கள் மாத்திரமின்றி, சீனா போன்ற வளர்ந்து வரும் கடன் வழங்குநர்களும் கடன் மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்துவது அவசியம் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடன் மறுசீரமைப்பிற்கான புதிய தளத்தில் அனைத்து கடன் வழங்குநர்களும் இணைவதற்கான சந்தர்ப்பம் எப்போதும் திறந்த நிலையிலேயே உள்ளதாகவும் ஜப்பானிய நிதி அமைச்சர் ஷூனிச்சி சுஸூகி கூறினார். (அ)

## சஜித்தை...

பேச்சு நடத்தியுள்ளனர்.

”இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிமார், சிறுகட்சிகள் குறித்து கவனம் செலுத்தவில்லை. ஆனால் நீங்கள் அதனை செய்கின்றீர்கள். எனவே, உங்களுக்கு ஆதரவு வழங்குவோம்.” என அவர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

இதன்போது, ”தனித்தனியே ஆதரவு வழங்குவதைவிட, கூட்டணி தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இணைத்துக் கொண்டு எனது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குங்கள். எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு எதிர்காலத்தில் பிரதமர் பதவியைக்கூட வழங்க தயார்.” - என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி சஜித்திடம், மனோ, ஹக்கீம் ஆகியோர் எடுத்துரைத்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu

# பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த கார் மீது சூடு!

## முழங்காவில் பகுதியில் சம்பவம்

மன்னார், ஏப். 15

**யாழ்ப்பாணத்தில் இருந்து முழங்காவில் பகுதியூடாக மன்னார் நோக்கிப் பயணித்த கார் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம் பெற்றது.

இதன்போது நவாலி, மானிப்பாயைச் சேர்ந்த செல்வமகேந்திரன் கமலரூபன் (வயது-36 ) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பானத்தில் இருந்து மன்னார் நோக்கி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் பயணித்த சமயம் முழங்காவில் பகுதியில் பொலிஸார் வீதிச் சோதனைக்காக காரை வழி மறித்தனர். ஆயினும் கார் நிறுத்தாமல் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடந்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குறித்த நபர் மன்னார், முருங்கன் வரை பயணித்துள்ளார்.

பின் முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கை வெற்றி பெறுவதாயின் வெளிப்படைத்தன்மை வேண்டும்

## உலக வங்கி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 15

இலங்கையில் சீர்திருத்தங்கள் வெற்றி பெறவேண்டுமாயின் அதிகரித்த வெளிப்படைத்தன்மை பேணப்படவேண்டும் என உலக வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

உலக வங்கியின் தெற்காசியாவுக்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் வாஷிங்டனில் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் கலந்துகொண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பு தொடர்பில் தமது ருவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ள மார்ட்டின் ரைசர், இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார நிர்வாக சீர்திருத்தங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான மீட்சியை பெறுவதற்கான முயற்சிகள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் உலக வங்கி, யோசனைகள் மற்றும் நிதியுதவியுடன் அதனை ஆதரிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான சமூகப் பாதுகாப்பு சீர்திருத்தம் உட்பட, சீர்திருத்த நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு அதிகரித்த வெளிப்படைத்தன்மை முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சி, ஏற்றுமதி சார்ந்த சிறு மற்றும் நடுத்தர வணிகங்களை ஆதரிப்பது என்பன குறித்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக உலக வங்கியின் தெற்காசியாவிற்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் தெரிவித்துள்ளார். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம்! இரு சிறுவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஏப். 15

அஹூங்கல்ல மித்தரமுல்ல பிரதேசத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந்தெரியாத இருவர், மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி சிகிச்சைக்காக பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சாரதி சுடப்பட்டதை அடுத்து மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகவும் அதில் பயணித்த இரண்டு சிறுவர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் அஹூங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவர் என்பதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கனடா அனுப்புவதாக கூறி பணம் மோசடி; 23 வயது பெண் யாழ்.பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஏப். 15

சட்டவிரோதமாகக் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறிப் பல இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் 23 வயது இளம் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொலைபேசி ஊடாக அறிமுகமான இந்தப் பெண் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஒருவரிடம் கட்டம் கட்டமாக 30 லட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொடர்புகளைத் துண்டித்துள்ளார்.

இவர் தனது சொந்த இடம் அச்சுவேலி என்று தெரிவித்திருந்த நிலையில், அங்கும் அவரைத் கண்டறிய முடியவில்லை.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணநிரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

சந்தேகநபரின் வங்கிக் கணக்கிலக்கம் மற்றும் தொலைபேசிப் பதிவுகளைக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸாரின் தொடர் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், டுபாயில் உள்ள தொழிலதிபர் ஒருவரின் வழிகாட்டலிலேயே வெளிநாடு அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரின் வங்கிக் கணக்கில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான கொடுக்கல், வாங்கல்கள் பதிவாகியுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)





(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# நல்லூரில் புதுவருட விசேட பூசை

யாழ்ப்பாணம், ஏப். 15

வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சோபகிருது வருடப்பிறப்பை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை காலை முருகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து வள்ளி - தெய்வயானை சமேதரராக வேற்பெருமான் வெள்ளி மயில் மீதினில் உள்வீதி மற்றும் வெளிவீதியில் எழுந்தருளி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (அ)



# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திலும் நேற்று புதுவருட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 15

வரலாற்றுச் சிறப்பு மிக்க துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய சோபகிருது வருட பிறப்பு பூசைகள் மிக சிறப்பாக இடம் பெற்றன.

ஆலய பிரதம குரு கணபதீஸ்வரக் குருக்கள் தலமையில் சிவாச்சாரியார்களால் சிறப்பு புது வருட பூசைகள் நடத்தப்பட்டன.

நேற்று வெள்ளி முற்பகல் 11: 30 மணியளவில் ஆரம்பமான பூசை பொங்கல் மற்றும் அபிசேக பூசைகளுடன் இடம் பெற்றன.

இதில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர். (அ-02)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.